# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் : 3 செப்டம்பர் 2021 விருந்து : 10



## தமிழ்த்துறை

## சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை *600 099.*

தமிழ்த்துறை - சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

நற்றமிழ்க்குடில்

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

**குடில் : 3 செப்டம்பர் 2021 விருந்து : 10**

## தமிழ்த்துறை

### சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

*சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி*
*சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.*

# நற்றமிழ்க்குடில்

ஆசிரியர் குழு : அ. ஸ்டெல்லாமேரி
முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு

பெ. சாந்தி
முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு

மு. ரம்யா
இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

ரா. பிரியதர்ஷினி
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

சா. பவித்ரா
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன்
கல்லூரித் தலைவர்

முனைவர் ம. சம்ஷாத்
கல்லூரி முதல்வர்

முனைவர் சே. கண்மணி
தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,
சென்னை 600 099.

*Blog : sokatamil blogspot.com*
*Facebook : Soka Tamil Avai*

# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்

## குடில் 3

## விருந்து 10

தமிழ்த்துறை

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

செப்டம்பர் 2021

## உள்ளே.........


தலையங்கம்

அறிவோம் அறிஞரை

மலரே.....

கட்டுரைகள்

பழமொழி நுண்பொருள்

நூல் நயம் பாராட்டல்

கவிதைகள்

அறிவியல் செய்திகள்

உணவே மருந்து

விடுகதைகள்

பண்டிகைகள் வரலாறு

சொல் விளையாட்டு

பொன்மொழிகள்

கடித இலக்கியம்

சிறுகதைகள்

தூரிகைத் தூரல்கள்

தகவல் களஞ்சியம்

பேராசிரியர் பக்கம்

முன்னாள் முத்துகள்

துறை நிகழ்வுகள்

# தலையங்கம்



டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் மாபெரும் தத்துவ மேதை. தமது இறுதி காலம் வரை நல்ல ஆசிரியராக வாழ்ந்து காட்டியவர். இவரது பிறந்த நாளான செப்டம்பர் 05ஆம் நாள் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்களுக்கான நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

நமது ஆசிரியர்களுக்கு நன்றி செலுத்தும் வாய்ப்பாக இந்நாள் அமைகிறது. நமது வழிகாட்டியாக, துணையாக இருக்கும் உளம் நிறைந்த ஆசிரியர்கள் குறித்துச் சில துளிகள்.

ஆசிரியர் என்ற சொல்லுக்கே ஓர் இனிமை உண்டு. ஆசு என்றால் குற்றம் என்று பொருள். இரியர் என்றால் நீக்குதல் என்று பொருள். எனவே, ஆசிரியர் என்ற சொல்லுக்குக் குற்றம் நீக்குபவர் என்ற ஆழ்ந்த பொருள் உள்ளது. ஆசிரியர் எத்தகைய பண்புடையவராக இருக்க வேண்டும் என்பதற்கு,

**குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குண மினையவும்**
**அமைபவன் நூலுரை யாசிரி யன்னே – நன்னூல் நூற்பா - 26**

நல்ல குடிபிறப்பு, அருளுடைமை, கடவுள் பற்று ஆகியவற்றோடு சொல்வன்மை, பூமி, மலை, துலாக்கோல், மலர் போன்றவற்றின் தன்மைகளுடன், உலக அறிவு மற்றும் உயர்ந்த குணங்கள் ஒருசேர அமையப் பெற்றவர்களே சிறந்த ஆசிரியர்கள் ஆவர் என நன்னூல் ஆசிரியர்களுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. மேலும்,

**தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்**
**பருவ முயற்சி அளவிற் பயத்தலும்**
**மருவிய நன்னில மாண்பா கும்மே – நன்னூல் நூற்பா - 27**

நிலத்தினைப் போன்று பரந்த அளவிட முடியாத கல்வி அறிவு, வலிமை, பொறுமை, உழைப்பவரின் முயற்சிக்கு ஏற்ப பலன் தருவது போல் மாணவர்களின் முயற்சிக்கு ஏற்ப பயன்படுவதிலும் ஆசிரியர்கள் நிலத்திற்கு ஒப்பாக இருக்கின்றனர் என்கிறார் பவணந்தியார்.

மலையினைப் போன்று அளக்க முடியாத கல்வியறிவும், பல வளங்களைக் கொண்டதற்கு இணையான கல்விப் புலமையும், தொலைவில் உள்ளவர்களுக்கும் புலப்படும் புகழும், வறண்ட காலத்தில் சுனை நீரினால் வளம் தரும் மலையினைப் போன்று வறுமையிலும் மாணவர்களுக்குக் கல்வி கொடுக்கும் வள்ளல் தன்மையும் உடையவர்களாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர்.

நிறைகோலினைப் போன்று ஒரு புறம் சாயாமல் நடுவுநிலையில் நின்று பாடம் கற்பிப்பவர்கள் ஆசிரியர்கள். மலரினைப் போன்று அனைவரும் எளிதில் அன்பு கொள்ளும் குணமும் முக மலர்ச்சியும் உடையவர்கள் ஆசிரியர்கள்.

நமது வாழ்வில் அம்மாவிற்கு அடுத்து நாம் அதிகமாகப் பார்க்கும் ஆராதிக்கும் மற்றொரு கதாப்பாத்திரம் நம் ஆசிரியர்களே. மழலைக் கல்வியின் போது இவர் ஆசிரியர், இவர்கள் மூலமாகவே நமது கல்வி வாழ்வு வளர்ச்சியடைய போகின்றது என்பதனை அறியாமலே ஆசிரியர் மீது அளவு கடந்த அன்பு வைக்கிறோம்.

உயர்நிலைக் கல்விக்குச் சென்றதும் நமது வயதும் மனநிலை மாற்றமும் ஆசிரியர் நம்மைக் கண்டிப்பவர் என்ற எண்ணம் நம் மனதில் மேலோங்கி நிற்கிறது. மதிப்பெண்களை நோக்கி பயணம் முடிவடைகிறது. பின் எதிர்காலப் பயணத்தை நோக்கி கல்லூரியில் அடியெடுத்து வைக்கிறோம். நமது பேராசிரியர்களின் அறிவுரைகளாலும் வழிநடத்துதல்களாலும் வாழ்வு என்ன? கல்வி என்ன? நம் திறமை என்ன? எதிர்காலம் எதை நோக்கி செல்கின்றது என்பவை போன்ற கேள்விகளுக்குப் பதில் கண்டு, தெளிவடைவதிலேயே மூன்று ஆண்டுகள் முடிந்து விடுகின்றன. ஆண்டின் நிறைவிலே மழலைக் கல்வி முதல், கல்வி கற்பித்து நம்மை உயர்த்திய ஆசிரியர்களின் அளப்பறிய பணியும் அர்பணிப்பும் மூளையில் புத்துயிர் பெறுகின்றது.

ஆசிரியர்கள் இயல்பாகவே பன்முகத் தன்மை உடையவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் மனநிலையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவரும் ஒரே தன்மை உடையவர்களாக இருப்பதில்லை, ஆனால் ஒரே ஆசிரியர் அத்தனை மாணவர்களும் விரும்பும் வண்ணம் இருக்க வேண்டும். இதனை ஆழ்ந்து சிந்தித்தால் வியப்பாக உள்ளது. ஓர் ஆசிரியருக்கு ஒவ்வொரு மணிநேர வகுப்பும் சவாலானதாகவே இருக்கின்றது.

தற்போது உள்ள நிலையில், குழந்தையைப் பள்ளியில் சேர்க்கச் செல்லும் போது பள்ளியின் தகுதியை ஆராய்வதோடு நில்லாமல் பணிபுரியும் ஆசிரியர்கள் எப்படிப்பட்டவர்கள் இவர்களின் கல்வித்தகுதி என்ன போன்ற பல சோதனைகள் நடத்தப்படுகின்றது. இதில் சிறப்பு என்னவென்றால் எந்த ஆசிரியரும் தகுதி வாய்ந்த மாணவனுக்கு மட்டுமே கல்வி பயிற்றுவிப்பேன் என்று கூறுவதில்லை. எத்தகைய மாணவனாக இருந்தாலும் அம்மாணவனை உருவாக்கி, பண்படுத்தி இச்சமூகத்தில் சிறப்புற்று வாழ வழிவகுக்கின்றனர்.

இலக்கணம் குறிப்பிடும் முறையில் மாணவர்கள் நாம் யாரும் இப்போது இருப்பதில்லை. ஆசிரியர்கள் எந்த மாற்றமும் இன்றி அனைத்து பண்புகளையும் திறமைகளையும் உடையவர்களாகவே இருக்கின்றனர்.

ஒவ்வொரு நாட்டின் எதிர்கால வளர்ச்சியும் அந்த நாட்டின் வகுப்பறையில்தான் உருவாக்கப்படுகின்றது. ஒரு சிறந்த ஆசிரியரால்தான் உலகம் இன்றளவும் பல்துறை அறிஞர்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக ஆசிரியர்கள் இருக்கின்றனர். மேலும், மாணவச் சமூகத்துக்குத் தேவையான ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி என்று அனைத்தையும் ஒரு சேர கற்றுக்கொடுத்து அவனை நல்லவனாக, அறிஞராக, மேதையாகச் சமூகத்தின் உயர்ந்த நிலைக்கு எடுத்துச்செல்லும் உயரிய பணியினை மேற்கொள்கின்றனர்.

கல்வியறிவு இல்லாத ஒரு சமூகம் ஆக்கப்பூர்வமான சமூகமாக இருக்காது. பண்புகள், பழக்கவழக்கங்கள், நல்லறிவு மற்றும் விழுமியங்கள் போன்றவற்றை இச்சமூகத்துக்குப் போதிப்பவர்கள் நல்லாசிரியர்களாகவே இருப்பார்கள்.

***கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு***
***மாடல்ல மற்றை யவை - குறள் 400***

என்று கல்வியின் பெருமையை வள்ளுவர் கூறுகின்றார். செல்வங்களில் அழிவில்லாதது கல்விச் செல்வம் மட்டுமே, அத்தகைய அழியாக் கல்வியை நமக்கு வழங்குபவர்கள் ஆசிரியர்களே. ஒரு சமுதாயம் அறிவார்ந்த சமுதாயமாக இருக்கின்றதென்றால் அதற்கு அர்ப்பணிப்பும் நல்லெண்ணமும் கொண்ட ஆசிரியர்கள்தான் காரணமாக இருக்க முடியும். ஒரு நல்ல ஆசிரியர் பலன் தரும் கனி மரத்தைப் போல பல மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து அடுத்த தலைமுறையினரை அறிவு வளர்ச்சிப் பாதையில் நடத்திச் செல்பவர்களாக இருக்கின்றார்கள்.

வரலாறுகளில் சிறந்த ஆசிரியர்கள் தனது கல்விப் புலமையை நூல்களாகத் தந்து இன்றைக்கும் எம்மோடு வாழ்கின்றார்கள். ஒரு மனிதன் இம்மண்ணுலகை விட்டு மறைந்தாலும் அவன் சொல்லிச் சென்ற கருத்துக்களும் கொள்கைகளும் என்றைக்கும் இச்சமூகத்துக்கு வழிகாட்டியாக அமைகின்றன.


சான்றாக வள்ளுவர், கம்பர், பாரதி, காமராசர், டாக்டர் இராதாகிருஷ்ணன், டாக்டர் அப்துல் கலாம் போன்ற பேராசான்கள் எமக்கு முன்னோடியாக இருக்கின்றனர். எந்தகாலத்துக்கும் பொருந்தக்கூடிய அவர்களது அறிவுரைகளும் வழிக்காட்டல்களும் நம் அனைவரையும் வழிநடத்தும். எனவே, இச்சமூகத்தின் ஆகசிறந்த வழிகாட்டிகள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையல்ல.

நல்லாசிரியர், என்றைக்கும் வாழ்வில் எல்லா சந்தர்ப்பங்களிலும் நமக்கு உந்து சக்தியாக, ஆற்றல் திறனாக இருக்கின்றனர். வழித்தவறிப் போன வழிப்போக்கனுக்கு வழியறிவித்து கரையேற்றும் அந்த ஆசிரியர்களை என்றைக்கும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பள்ளியில் கல்வி அறிவினைக் கற்றுக் கொடுத்தவர்களுக்கு மட்டுமல்லாது தமது அனுபவத்தால் அவ்வப்போது அறிவுரைகள் கொடுத்து நல்வழியில் இட்டுச்செல்லும் அனைவரும் நம் ஆசான்களே! அவர்களையும் ஆசிரியர் திருநாளில் நினைத்துப் போற்ற தவறாதீர்கள்.

**ரம்யா. மு**
**இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

## அறிவோம் அறிஞரை



# க. பூரணச்சந்திரன்

*அறிஞர் திரு க. பூரணச்சந்திரன் அவர்கள் தமிழ் எழுத்தாளர். இவர் 1949ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் வேலூர் மாவட்டம் ஆற்காட்டில் பிறந்தார். திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரியில் தமிழ்த் துறைத்தலைவராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். வேலூர் ஊரிசு கல்லூரியில் இயற்பியல் இளங்கலையும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுகலைப்பட்டமும் பெற்றவர்.*

*இவர் நல்ல விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், திறனாய்வாளர், இதழியல் துறையில் பணியாற்றியவர். இவர் காலச்சுவடு, நிகழ், தமிழ் நேயம் போன்ற இலக்கிய இதழ்களில் கட்டுரைகளை எழுதியுள்ளார். பதினேழுக்கும் மேற்பட்ட மொழிப்பெயர்ப்பு நூல்களையும் பல தொகுப்பு நூல்களையும் பதிப்பித்துள்ளார்.*

*திருச்சியில் முதன் முதலில் பாதல் சர்க்காரின் பெயரால் நாடகப்பட்டறை நடத்தியவர். திருச்சி வாசகர் அரங்கம், திருச்சி நாடகச் சங்கம், சினிஃபோரம் போன்றவற்றில் பங்கேற்றவர். இன்றைய இளைய சமுதாயத்தினரை இத்துறைகளில் ஈடுபட முனைப்புடன் செயல்பட்டு வருபவர்.*

*ஐயா அவர்கள், ஆனந்த விகடன் 2011ஆம் ஆண்டின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதினையும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தி.சு. நடராசன் அறக்கட்டளையால் 2018ஆம் ஆண்டு திறனாய்வுச் செம்மல் விருதினையும் 2016ஆம் ஆண்டு சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருதினையும் பெற்றுள்ளார்.*

*பணி ஓய்விற்குப் பின்னர் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு என்ற திட்டப்பணியினைத் திறம்பட செய்து முடித்தவர். 2015ஆம் ஆண்டு இவரது பெயரில் திறனாய்வு அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளையின் மூலம் மாணவர்களுக்குத் திறனாய்வு மற்றும் பல்வேறு துறைகளில் பயிற்சிப் பட்டறை நடத்தி வருகிறார்.*

***இவர் இயற்றிய நூல்களில் சில:***

*இந்துக்கள் ஒரு மாற்று வரலாறு, நீதி பற்றிய கோட்பாடு, அரசியலின் இலக்கணம், வரலாற்றில் பிராமாண நீக்கம், நள்ளிரவின் குழந்தைகள், நாகரீகங்களின் மோதல், பொறுப்புமிக்க மனிதர்கள், கடவுள் தந்தை, இந்திய விடுதலை வெற்றி, நொருங்கிய குடியரசு போன்ற பல நூல்களின் ஆசிரியர்.*

***ர. சங்கீதா***
**முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**

## மலரே……



# ஈங்கை மலர்

கபிலரின் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள மலர்களில் ஈங்கை மலர் ஒன்றாகும். இம்மலர் குறிஞ்சிப்பாட்டில் 70ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. ஈங்கை என்னும் இப்புதர் செடியை நச்சினார்க்கினியார் "இண்டம் பூ" என்று கூறுகிறார். இளவேனில் காலத்தில் கோங்கம் பூ பூக்கும் பொழுது ஈங்கை மலர்கள் தளிர் விடுகின்றன. ஈங்கையின் தளிர் மழைப் பொழியும் காலங்களில் மாந்தளிர் போன்று காணப்படுகின்றது.

பெருங்காதை, **"ஈங்கையும் இலவுந் தேங்காய் நெல்லியும்"** என்று ஈங்கை பூவைப் சிறப்பித்துக் கூறுகின்றது. மழைப் பொழிவது போல ஈங்கை மலர்கள் அரும்பும் என மழையுடன் ஒப்பிட்டு அகப்பாடல் கூறுகின்றது. ஈங்கை பூ வெண்மை நிறத்தையுடையது. இம்மலர் கார்த்திகை, மார்கழி திங்களில் வயல்வெளியில் பூக்கும். இப்பூவை மாமரத்திற்கு வேலியாகப் பயன்படுத்துவார்கள். ஈங்கை மலரின் உட்பகுதியில் பஞ்சு போன்ற ஒரு பொருள் காணப்படும். அது **"துய்"** என்று அழைக்கப்படுகிறது. இம்மலர் குறுந்தொகையில் **"வண்ண துய்ம்மலர்"** என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.



நற்றிணை ஈங்கை மலரைக் குருவியின் குஞ்சுகளுக்கு உவமையாகக் காட்டியுள்ளது. இச்செடியின் முட்கள் வளைந்து காணப்படுகிறது. முள்ளோடு இருக்கும் இதன் அரும்புகள் சிவப்பு நிறமாகக் காணப்படும். மான்கள் விரும்பி மேயும் இண்டு முள்ளோடு சேர்த்து படர்ந்து இருக்கும்.

**சங்க காலப் பாடல்களில் ஈங்கை:**

துய்த்தலைப் பூவின் புயல் இவர் ஈங்கை - அகநானூறு
வெண்தாடி ஈங்கை பைம்புதல் - ஐங்குறுநூறு
அட்டு அரக்கு உருவில் வட்டு முகை ஈங்கை - நற்றிணை
யாரங்கே செய்வார் கொல் தோழி ஈங்கைய - குறுந்தொகை
ஈங்கை இலவம் தூங்க இவர் கொன்று - குறிஞ்சிப்பாட்டு

**க. மகாலட்சுமி**
**இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

## கட்டுரைகள்

# வ. உ. சிதம்பரனார்



ஓவியம் - சீ. யாமினி
இளம் வணிகவியல்
மூன்றாமாண்டு

வ.உ.சிதம்பரனாரின் இயற்பெயர் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம்பிள்ளை. இவர் செப்டம்பர் மாதம் 5ஆம் நாள் 1872ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் பிறந்தார். இவரது பெற்றோர் உலகநாதன் பிள்ளை, பரமாயி அம்மாள் ஆவர்.

### இளமைப் பருவம்

வ.உ.சி தனது ஆறாவது வயதில் வீரப்பெருமாள் அண்ணாவி என்ற தமிழாசிரியரிடம் தமிழ்க் கற்றார். அரசாங்க அலுவலரான திரு. கிருஷ்ணன் அவர்களிடம் ஆங்கிலம் கற்றார். பின் இவர் தூத்துக்குடியில் உள்ள புனித சேவியர் பள்ளி மற்றும் கால்டுவெல் பள்ளியில் கல்வி பயின்றார். கல்லூரிப் படிப்பைத் திருநெல்வேலியில் இந்துக் கல்லூரியில் கற்றார்.

வ.உ.சிதம்பரம்பிள்ளை தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் புலமைப் பெற்றவர். வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், மொழிபெயர்ப்பாளர், தொழில் சங்கத்தலைவர், சுதந்திரப் போராட்ட வீரர் எனப் பன்முகத்தன்மை கொண்டவராவார்.

### விடுதலைப் போராட்டம்

வ.உ.சிதம்பரம்பிள்ளை விடுதலைப் போராட்டம் மற்றும் தமிழ் இலக்கியம் ஆகியவற்றிற்கு தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்தவர். இவர் 1892இல் பாலகங்காதர திலகர் அவர்களால் கவரப்பட்டு, அவருக்குச் சீடரானார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றதோடு பிறரையும் போராட்டத்தில் பங்கு பெறச்செய்தார். ஆங்கிலேயர்களின் அடக்கு முறைகளை எதிர்த்துப் போராடினார்.

## பொது வாழ்வு

வ.உ.சி மகாகவி பாரதியாரின் நெருங்கிய நண்பர். பாரதியாரின் விடுதலைப் போராட்டப் பாடல்கள் இவருக்கு ஊக்கத்தை அளித்தது. சிதம்பரம்பிள்ளை 1906ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் 'சுதேச நாவாய் சங்கம்' என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவுச் செய்தார்.

வ.உ.சி ஆங்கில அரசுக்கு எதிராகச் சொற்ப்பொழிவுகள் நிகழ்த்தினார். சுப்பிரமணிய சிவாவிற்கு அடைக்கலம் கொடுத்தார் என்ற காரணங்களுக்காக 1906இல் காவல்துறையினர் வ.உ.சிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். நீதிபதி பின்றே இவருக்குத் தீர்ப்பு வழங்கினார். ஆறு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டு, கோவைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

## சிறை வாழ்க்கை

சிறைக்குச் சென்ற வ.உ.சி சணல் நூற்றார், கல் உடைத்தார், மாடுகள் இழுக்கும் செக்கினை இழுத்தார். இதன் காரணமாகவே செக்கிழுத்த செம்மல் என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

1912ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 24ஆம் நாள் சிறையிலிருந்து விடுதலைப் பெற்றார். விடுதலைக்குப் பின் சென்னை, கோயம்பத்தூர், கோவில்பட்டி, தூத்துக்குடி போன்ற இடங்களில் வசித்து வந்தார்.

## இயற்றிய நூல்கள்

இவர் மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை என்ற நான்கு நூலும் கவிதைகளால் ஆனவை. இன்னிலை, சிவஞான போதம், திருக்குறள் ஆகிய மூன்று நூலுக்கு உரை எழுதியுள்ளார். கடவுளும் பக்தியும், கடவுள் ஒருவரே, மனிதனும் அறிவும், மனமும் உடம்பும், வினையும் விதியும், விதி அல்லது ஊழ் ஆகிய கட்டுரைகளை எழுதியுள்ளார். விவேகபானு, இந்து நேசன், தி நேஷனல் பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

**“செக்கிழுத்த செம்மல்”** கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை நவம்பர் மாதம் 18ஆம் நாள் 1936ஆம் ஆண்டு தமிழ் மண்ணை விட்டு மறைந்தார். தமிழ்நாடு அரசு வ.உ.சி பிறந்த ஊரில் உள்ள அவரது இல்லத்தை நூலகமாக மாற்றி அமைத்துள்ளது. இங்கு வ.உ.சியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.

**பெ. சாந்தி**
**முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு**

# பழமொழி நுண்பொருள்

**பாத்திரம் அறிந்து பிச்சை இடு!**

*பிச்சைக்காரன் வைத்திருக்கும் பாத்திரத்தின் தன்மையை அறிந்து அதற்கேற்ப அவனுக்குப் பிச்சையிட வேண்டும் என்பது இப்பழமொழிக்கு நாம் அனைவரும் அறிந்த விளக்கம் ஆகும்.*



**உண்மைப் பொருள்**

*பழமொழி, பேச்சு வழக்கினால் ஏற்பட்ட எழுத்துப் பிழையால் பொருளே தவறாகக் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் இந்தப் பழமொழியை நுண்மையாக ஆராய்ந்து பார்த்தால், இதற்கு வேறு பொருள் புலப்படும்.*

*பிச்சை என்ற சொல் பழங்காலத்தில் பரிசு என்ற பொருளில் பயன்பாட்டில் இருந்திருக்கின்றது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பண்டைய காலத்தில் மன்னனைப் புகழ்ந்து பாடும் புலவர்களுக்கு மன்னன் பரிசு பொருட்களை வழங்கியிருக்கின்றான். மன்னனை உயர்வாகப் புகழ்ந்து பாடும் புலவனின் பாட்டுத்திறத்திற்கேற்ப புலவனுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன் அடிப்படையில்தான் இந்தப் பழமொழி தோன்றி இருக்க வேண்டும்.*



*பேச்சு வழக்கில் காலப்போக்கில் பழமொழியில்* ***பாத்திறம்*** *என்ற சொல்லில் 'ற' கரத்திற்குப் பதிலாக 'ர' கரத்தைப் பயன்படுத்தியதால்,* ***பாத்திரம்*** *என்று வழங்கப்பட்டு, பாட்டுடையத் திறம் என்ற பொருள் மாற்றமடைந்து பாத்திரம் என்று பொருள் கொள்ளப்பட்டு பழமொழியின் பொருளே மாறிவிட்டது. முன்னோர்களின் வாய்மொழி இலக்கியமான பழமொழிகள் அறிவு சார்ந்தவை. ஆகையால் இதன் நுட்பமான பொருள் இதுவேயாகும்.*

**பா. லோகேஷ்வரி**
**இளங்கலைத்தமிழ்**
**இரண்டாமாண்டு**

# நூல் நயம் பாராட்டல்




**நூலின் பெயர் – சொல் அறை**

**நூலாசிரியர் – ராசி அழகப்பன்**

**வெளியீடு – ஆகஸ்ட் 2021**

ராசி அழகப்பனின் சொல் அறை என்ற நூல் முதல் பதிப்பாகக் கடந்த ஆகஸ்ட் 2021ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

**'எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே'** என்பார் தொல்காப்பியர். ராசி அழகப்பனின் கவிதைச் சொற்கள் மனித மனத்தின் எல்லா கோணங்களையும் ஒளிவு மறைவின்றி வெளிச்சமிட்டுக் காட்டுபவை.

ஏமாற்றங்களில் சோர்வு காண்பதை விட சிறந்தது, கிடைப்பனவற்றில் முழு மகிழ்வு காண வேண்டும் என்பதே அவருடைய கவிதை தொனி ஆகும்.

***மகிழ்ச்சியின் நீட்சி***
***நம்பிக்கை ஆவதைவிட***
***கண்ணீரின் வீழ்ச்சிக்கு***
***காரணமாகாதெனில் மகிழ்ச்சி***

என இவர் சொல்லை அடிப்படையாக வைத்து அனைத்துக் கவிதைகளையும் எழுதியுள்ளார்.

***"விழுந்த விதை எழும் மரமாய்***
***இயற்கை படைப்பின் இலக்கணம்***
***அதுதான் மனிதம்"***

என்ற வரிகள் மண்ணைப் பிளந்து முளைக்கும் விதைப் போன்றவன் மனிதன். இன்றைய உலகில் மனிதர்களுக்கிடையே பல வேறுபாடுகள் வளர்ந்துவிட்டன. மனிதனை மனிதன் அடிமைப்படுத்தி அழிக்கத் தொடங்குகிறான். உலக வளங்களைச் சுரண்டுகிறான். பகை நாட்டில் மனித இனம் தோன்றாது தடுக்கிறான். இவை அனைத்தும் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இருப்பினும் காரல் மார்க்ஸ் எடுத்துரைக்கும் சமூகவியல் கோட்பாடு என்பது இனமும் சமூகமும் ஒன்றையொன்று அழித்தாலும் புது இனமும் சமூகமும் உருவாகும். இக்கோட்பாட்டின் பிழிந்தெடுக்கப்பட்ட துளிதான் ராசியின் மேலே சொல்லப்பட்டிருக்கும் கவிதை.

வாழ்தலுக்கான உயிர்ப்பைத் தரக்கூடியவை இவரது கவிதைகள். எதிர்மறை மனோபாவத்தை இவரது கவிதைகளில் காண்பது அறிது.

**“வாழ்வது இன்னும்**

**ஒரு வகை வெற்றியே”**

வாழ்வு சுமக்க வேண்டிய சுமையல்ல. சுவைத்து மகிழவேண்டியது என்கிறார் ராசி அவர்கள் இவ்வரிகளில்.

‘சொல் அறை’ நூல் தொகுப்பு வெறும் சொற்களை மட்டும் கொண்டு உருவானது அல்ல. அவ்வறையில் பல மரம், செடி, கொடி, நீர், நிழல் என அனைத்தையும் மனித மன பிம்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

**“படுத்துறங்குவது கூட**
**பட்டியல் போட்டால்**
**வரும் கனவு எனதா? உனதா?”**

என்ற வரிகள் தனிமனித சுதந்திரத்தைக் கோரும் விடுதலைக் குரலாகும். ஏமாற்றுவது தவறு எனில் ஏமாறுவதும் தவறு என்பது அவரது குரல்.

**“நீ நம்புவது போல்**
**நம்பி ஏமாந்தால்**
**நான் மட்டுமல்ல**
**நீயும் தான் காரணி”**

'கை' என்னும் தலைப்பில் நம்பிக்கையைப் பற்றி எழுதியிருக்கின்றார். எவ்வளவு ஆழமான சிந்தனை, எண்ணிப் பார்த்தால் எல்லாவற்றுக்கும் காரணி அவரவர் செயல்களும் எண்ணங்களுமே என்பது புலப்படுகிறது.

**“வெற்றி தோல்வி இரண்டுமே**
**உழைத்த பின் கிடைப்பது**
**அதிசயமல்ல வெற்றியின் குணமே**
**சோதித்து சேர்வது**
**பிறகென்ன**
**கிடைக்காமலா போய்விடும் வெற்றி”**

என்ற வரிகளில் வெற்றி தோல்வி இரண்டையும் குறிப்பிடுகிறார். தோல்விகள் தொடர்வதில்லை ஏனென்றால் முயற்சி செய்பவனின் செயல் முடக்கப்படுவதில்லை. முடிந்து போவதும் இல்லை. இறுதியில் அவை வெற்றியின் விளம்பில் சேர்ந்துவிடும். 'வெற்றிகள் முடிவதில்லை' ஏனென்றால் தோல்விகளின் அனுபவப் பாதை என்றுமே முடிந்துவிடாது. அவை தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று இரண்டையும் உணர்த்துகின்றார்.

ராசி அழகப்பன் அவர்கள் தனது 30 ஆண்டுகால இலக்கியப் பணியின் ஆக்கமாக இந்நூலைக் கருதுவதைவிட, அவருடைய வாழ்நாளில் பெற்ற அனுபவங்களின் வார்ப்புகளாகக் கருதுவதே சரியானது. ஒவ்வொரு மனிதருக்குள்ளும் மறைந்திருக்கும் ஆழ்மன அறைதான் இந்த ‘சொல் அறை’.

**வெ.கொ. பிரியங்கா**
**முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு**

# கவிதைகள்

## பாரதியார் 150ஆவது நினைவு நூற்றாண்டு விழா கவிதைகள்

### எங்கள் பாரதி



எட்டயபுரத்தில் பிறந்தவரே!
எண்ணிலடங்கா கவி படைத்தவரே!
பக்திப்பாடல் தந்தவரே!
படிப்பறிவு புகுத்தியவரே!

மூடநம்பிக்கையை முடக்கியவரே!
முத்தமிழ் மூச்சாய் இருந்தவரே!
விடுதலைக்கு வித்திட்டவரே!
விதையாய் எங்கள் மனதில் நிற்பவரே!

வீசும் காற்றைக் கவியாய் பாடியவரே!
சிவசக்தியிடம் முறையிட்டவரே!
சமூகநலனைச் சாத்தியமாய்ச் சித்திரம் படைத்தவரே!
அறத்தினைப் பாட முளைத்தவரே!


கவிஞானியாய் புகழ் மகுடம் சூடியவரே!
காட்டுத்தீயாய் கவிதைகளைத் தெரிக்க விட்டவரே!
தமிழ்நாட்டை வீறுகொள்ள செய்தவரே!
தமிழுக்குப் பெருமை சேர்த்தவரே!

தமிழால் உயர்ந்தவரே!
தமிழரசனாய் இருந்தவரே!
தத்துவம் புகட்ட உம் கவிகள் இருக்கும் வரை
தெகிட்டாது இச்செந்தமிழ்!

திக்கெட்டும் பாடுவோம் பாரதியின் புகழ்!!!!!!!!!!

பி. லோகஸ்ரீ
இளம் வணிகவியல், மூன்றாமாண்டு

# பாரதி என்னும் சூரியன்



பாரதி என்னும் சூரியனே!
நீ உதித்தாய் எட்டயபுரத்தில்
உன் கவிதையால் திகழ்ந்தாய் எட்டுத்திக்கும்
உன் சிந்தனையைக் கவிதையாய் உருவாக்கி
கவிதையை மாபெரும் ஆயுதமாக்கி
அதன்வழி பல கீழ்மையான சிந்தனைகளை
அழித்தாய்!
உன் கவிதை என்னும் ஒளி மூலம்
சமுதாயத்தின் தீய இருளைப் போக்கி
ஒளியை ஒளிரச் செய்தாய்!
கவிதையை உன் கையில் ஆயுதமாய் ஏந்தி
பெண்களுக்கு எதிரான
வன்கொடுமைகளை வெட்டிச் சாய்த்தாய்!
சாதி என்னும் அரக்கனை
உன் உரத்த சிந்தனை மூலம் வென்றாய்!
மூடநம்பிக்கைகளைப் பேனா பிடிக்கும்
இரு விரல்கள் மூலம் கிள்ளி எறிந்தாய்!
உன் குயில் பாட்டு மூலம் மக்களின் மனதில்
குயிலைக் கூவச் செய்தாய்!
உன் கண்ணன் பாட்டு மூலம் அனைவரின் இல்லங்களில்
கண்ணனை ஓடி விளையாட செய்தாய்!
சுதந்திரம் கிடைக்கும் முன்னரே உன் பாடல் மூலம்
சுதந்திரக் காற்றை எங்கள் மீது வீசினாய்!
உன் கவிதையை எங்கள் மீது
தேன் மழையாய் பொழிந்தாய் - பாரதி நீ
தமிழுக்குக் கிடைத்த மாபெரும் சாரதி!
தமிழ்தாய் மீண்டும் உன்னை
மகனாகப் பெற துடிக்கிறாள்
இவ்வுலகம் உள்ள வரை பாரதி புகழ் ஒலிக்கும்
பாரதி வாழ்க! உன் கவிதை வாழ்க!

**மா. ஜெகதீஸ்வரி, இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு**

# மகாகவி பாரதியார்



எட்டயபுரத்தில் பிறந்த சுப்பிரமணிய
பாரதியாக!
அறியாமையை அகற்ற வந்த ஓர் ஆசானாக!
பெண் உரிமைக்காக அயராது உழைத்ததில் பேரரசனாக!
சமூக நீதிக்காகப் போராடியதில் ஒரு சமூகவாதியாக!
தமிழை வளர்க்க வந்த தமிழ்த் தந்தையாக!
மரபுக் கவிதைகள் இயற்றுவதில் மன்னனாக!
பாரத சமுதாயம் படைக்க விரும்பிய பாரதத் தாயாக!
பாஞ்சாலி சபதம் இயற்றியதில் ஒரு புலவனாக!
மூடநம்பிக்கைகளை எதிர்த்த மூத்த குடிமகனாக!
'அச்சம் இல்லை அச்சம் இல்லை' எனப் பாடிய ஓர் ஆசிரியராக!
விடுதலைக்காகப் பாட்டெழுதிய ஒரு விடுதலை வீரனாக!
சாதியை ஒழிக்க வந்த சகோதரனாக!
'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற தமிழ்ச் சித்தனாக!
மக்களின் உணர்வுகளை மதித்த மாமன்னனாக!
தேசமெங்கும் தமிழ் வளர்த்த தேசத் தோழனாக!
வேற்றுமைகளை உடைக்க வந்த ஒரு வேங்கையாக!
கண்ணன் பாட்டு பாடிய கவிஞனாக!
பாரத நாட்டை மீட்க விரும்பிய பாரதத் தாயின் மகனாக!
தாய் மொழியைக் காக்க வந்த மொழிக் காவலனாக!
சுதந்திர விடியலைக் காண விரும்பிய சூரியனாக!
இவ்வாறு நம் நாட்டு மக்களின்
அனைத்து உறவுமாக!
உணர்வுமாக என்றென்றும் நீயே இருப்பாய்..
ஒரு மகாகவியாக!...

**பா. லோகேஸ்வரி**
**இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

## கவிதையின் தலைவன்



கவிதையின் தலைவனே!
மக்கள் உணர்ச்சியின் அரசனே!
கவிதைத் தலைவனாய் நீ இருப்பதால்தான்
இன்றளவும் கவிதை அழியாமல் உள்ளது!
நீ இறந்தாலும் உன் நினைவால்
எங்கள் மனதில் அரசனாய் அமர்ந்துள்ளாய்!
விடுதலைக்கு வித்திட்ட வித்தகரே!
விமர்சனம் இல்லா உத்தமரே!
மக்களுக்கு வீரமிக்க
பாடலைக் கொடுத்த வள்ளலே!
புதுமைப் பெண்ணை
உருவாக்கிய அற்புதமே!
கவிதைக் கடலின் ஆழம் அறிந்தவனே!
தமிழன்னையின் பிள்ளையாய் உள்ளவனே!
உன்னைப் போன்ற கவிஞன் இவ்வுலகிலுண்டோ?
வீரமிக்க பாடல் கொடுத்தவனே!
விண்ணளவு கற்பனை உயர்த்தியவனே!
உன் புகழ் பாட இன்னும் எத்தனை
பிறவி எடுத்தாலும் போதாது!
கவிதை புயலே - உன் கவிதை
பசுமரத்தாணிப் போல் மனதில் பதிந்தது!
கவிதையை உணர்ச்சியாய் வெளிப்படுத்தியவனே!
எழுத்தாளரின் கனவு நாயகனே!
உணர்ச்சி பொங்க செய்யும் மொழிநடையாளனே!
உன் வீர வரிகளுக்கு எங்கள் சிரம் தாழ் வணக்கங்கள்!!!

**க. மகாலட்சுமி**
**இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

## மகாகவி

முண்டாசுக் கட்டியவனே!
முறுக்கு மீசை உடையவனே!
கவிதையில் புரட்சி செய்தவனே!
கனவுகள் பல கண்டவனே!
சாதிகள் இல்லையென்று உரைத்தவனே!
சீர்த்திருத்தவாதி எனப் பெயர் பெற்றவனே!
பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவனே!
பாரெங்கும் புகழ் கண்டவனே!
விடுதலையை மூச்சாய் நினைத்தவனே!
வெற்றி நாயகனாய் மலர்ந்தவனே!
உன் கவிதைக்கு உயிர் உள்ள வரை
உன் புகழுக்கு அழிவுண்டோ?

**சு.சோபியா சாரோன் ஏஞ்சல்**
**இளமறிவியல் கணிதவியல், மூன்றாமாண்டு**

# வழிகாட்டியாகப் பாரதி

முண்டாசு கட்டிய பாரதியே!
தமிழுக்கு நீதான் கவிதை தீயே!!
விடுதலைக்குப் பாடலிலே வழி கொடுத்தாய்!
வெள்ளையனுக்கு மனதளவிலே வலி கொடுத்தாய்!!
புரட்சிக் கருத்துகளை உண்டாக்கினாய்!
புதுமைப் பெண்களை உருவாக்கினாய்!!
இளைஞர்களைக் கவிதை எழுதத் தூண்டினாய்!
சிறு பிள்ளைகளையும் உன் கவிதை பாட வைத்தாய்!!
வள்ளுவனை அன்று நீ பாராட்டினாய்!
பாட்டுக்கொரு புலவன் என்று - உன்னைப்
பாராட்டாதவர்கள் உண்டோ?
உணர்ச்சி மிக்க கவிதைகளின் நாயகனே!
செந்தமிழுக்கு நீதான் என்றும் தலைமகனே!!
நாடு செழிக்க பாடிய நந்தவனமே!
கவிதைக்கு நீதான் வான் நிலவே!!
வறுமையிலும் பெருமையோடு வாழ்ந்தாய்!
இன்றைய சமுதாயத்திற்கு
நீயே வழிகாட்டியாகத் திகழ்கின்றாய்!!

**ஹ. யமுனா**
**இளமறிவியல் கணிதவியல்**
**மூன்றாமாண்டு**

# பெண்ணுரிமை

பெண்ணுரிமையைப் போற்றிப் புகழ்ந்தவரே!
எம் நாட்டின் வெற்றிக் கவிஞர் பாரதியே!
பெண் விடுதலைக்காகப் பாடுபட்டவரே!
பெண்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தவரே!
பெண்ணடிமை நிலை மாற எண்ணியவரே!
அடிமை எண்ணத்தை மாற்றியவரே!
பெண்களுக்குச் சமஉரிமை வழங்கப் போராடியவரே!
பெண்களும் சமம் என்று கூறியவரே!
பெண் கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என்றவரே!
கவிதையில் அருஞ்சிந்தனையை ஊட்டியவரே!
பெண்ணின் சிந்தனைக்கு அடித்தளமாய்த் திகழ்ந்தவரே!
ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என்று பாடியவரே!
பெண்குல உரிமைக்காகக் குரல் கொடுத்தவரே!
பெண்களை எதிர்த்தோரை எதிர்த்துக் குரல் எழுப்பியவரே!
பெண்ணின் சிறப்பைப் பெருமையாகச் சொன்னவரே!
கவிதைகளின் தலைவனாகத் திகழ்ந்தவரே!

**மோ. திவ்யபாரதி**
**இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு**

# பாரதியார் நினைவு



பார்தனுக்குத் தேரோட்டிய சாரதி
கண்ணனுக்குக் கவிதை வடித்தான் பாரதி!
காக்கை குருவி எங்கள் சாதி என்றான்
காலத்தால் அழியா கவி படைத்தான்!
ஆச்சாரக் குடும்பத்தில் பிறந்தான் - பலரும்
ஆச்சர்யப்பட பெரிய மீசை வைத்தான்!
எட்டயபுரத்தில் அவதரித்தான்
எட்டா உயரத்தைத் தொட்டான்!
முண்டாசுக் கவிஞன் பாரதி
மூடநம்பிக்கையை வேரறுத்தான்!
வ.வே.சுவுடன் கரம் கோர்த்தான்!
சுப்ரமணிய சிவாவுக்குத் தோள் கொடுத்தான்!
வெள்ளையனே வெளியேறு எனக் குரல் கொடுத்தான்
வீரத்தை நெஞ்சில் விதையாய் விதைத்தான்!
என்று தனியும் இந்தச் சுதந்திரத் தாகம்? என்றான்!
சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க அவனில்லை!!
சாதிகள் இல்லையடி பாப்பா என்றான்!
சாதிவாரி கணக்கெடுக்கும் நம்மைப் பற்றி என்ன நினைப்பான்?
இதைவிட கொடுமை வேறுண்டோ?
கவியரசர், கவிப்பேரரசு பட்டங்கள் அவனுக்கில்லை!
பாரதி இல்லாமல் பள்ளிப் பாடங்கள் இல்லை!
பாரதி நம் தேசத்தின் சொத்து என்றார் காந்தி
பாரதி புகழ் போற்றுவோம்!
என்றும் அவனை நம் நினைவில் ஏந்தி!!!

**மு. துர்கா**
**இளம் கணினிப் பயன்பாட்டியல்**
**இரண்டாமாண்டு**

# ஆசிரியர்களுக்குச் சமர்ப்பணம்

*வளமுடம் வாழ வாழ்க்கைப் பாடத்தை*
*வகுத்து சொல்லும் அறிவுரை!*
*அறிவுரை அல்ல அறிவின் பாதைக்கு வழி!*

*ஏணியாய் ஏற்றம் கொடுத்து என்றும்*
*ஏற்றத்தைக் காண செய்தவரே – வீழ்ந்திடினும்*
*உம் ஊக்கம் என்னை எழுச்சி பெறச் செய்யும்!*

*என் எதிர்கால கனவைக் கண்முன்*
*காண்கின்றேன் – என்*
*ஆசிரியர் சாயலில்!*

*பண்பானவளாய்..... அன்பானவளாய்....*
*படித்த பெண்ணாய் – இச்சமூகம்*
*என்னை அங்கீகரிக்கக் காரணமானவர்!*

*நான் செய்யும் தவறை ஒருபுறமும்*
*என்மீது பாசத்தை மறுபுறமும்*
*சரிநிகர் சமமாய் பார்க்கும் நீதி தேவதை!*

*வகுப்பறை கரும்பலகைக்குத் தெரியும்...*
*மேசைக்குத் தெரியும்... சுவற்றிற்கும் தெரியும்...*
*நம் உறவின் மகத்துவம்!*

*தன்னலம் கருதாது மாணாக்கரின்*
*பல திறமைகளை வெளிக்கொணர்ந்து பார் போற்ற*
*புகழ் சேர்க்கும் பண்பாளர் ஆசிரியர்!*

*கற்பிக்கும் பணியை மாணாக்கரின் வளர்ச்சியைக்*
*கடமையாய் கொண்டு வாழும் கடவுளால் அனுப்பப்பட்ட*
*உன்னத உயிர் என் ஆசிரியர்!*

**அ. ஸ்டெல்லாமேரி**
**முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# என் ஆசிரியர்கள்

கல்விப் பயணம் அழுகுரலுடன்ஆரம்பம்
கால்கள் நுழைந்தன முதல் வகுப்பில்...
மழலை மாறா பருவம் அரிச்சுவடியில் - எங்கள்
அறிவு தேடலின் தொடக்கம்...
தாய் மட்டுமே தெரிந்த கண்ணில்
ஒரு மாற்று பிம்பம் என் ஆசிரியர்...
அகரம் தொடங்கி உயிர்மெய் இணைப்புவரை
இளமைகால கற்றலின் முன்னேற்றம்...

வருடமும் வயதும் வகுப்பறையும்
காலத்தின் கருணையால் மாற்றத்தை ஏற்றது...
மண்டியிட்டு மனப்பாடம் செய்தாலும்
மதிப்பெண் உன் அடையாளமல்ல
புரிந்து அறிதலே என்று கண்டிப்புக் குரலில்
ஆங்கில ஆசிரியரின் அறிவுரை...
துவண்ட போதெல்லாம் நம்பிக்கை வார்த்தைகள்
தட்டிகொடுத்த கரங்களின் நினைவுகள்
மகிழ்ச்சியில் கணத்தது என் இதய அறைகள்...

ஒருகணம் கற்றலின் பயணத்தை
மனக்கண் முன்னே காட்டியது
அலமாரியில் கிடைத்த பள்ளிகாலப் புகைப்படங்கள்...
அவர்கள் ஏற்றிய அறிவொளி - என்னை
வாழ்க்கைக் களம் கண்டு
சாதனைகள் படைத்திட காட்டிய பாதைகள்...

விழியின் விளிம்பில் மகிழ்ச்சியின்
கண்ணீர்த் துளிகள் கசிந்தன – எனக்கு
அடையாளம் தந்த ஆசிரியர்களை எண்ணி...
அறியாமையை அகற்றிய
ஆசிரியர்கள் என்றும் என் மனக்கண்ணில்
நன்றி மறவேன் நான்......

**க. ஆனந்தி, முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# எங்கள் ஆசிரியர்

கொட்டும் மழையைக் கொண்டாடுவதைப் போல்..
கொட்டிய வானத்தைக் கொண்டாடுவதே இல்லை...
கல்வி, சமூக அக்கறை, ஒழுக்கம் என அனைத்தையும்
சொல்லி தந்த வானம் நம் ஆசிரியர்கள்...
வெள்ளைக் காகிதங்களான எங்களை
வண்ணமயமாக மாற்றும் விந்தைக்காரார்கள்....
எங்கள் பட்டம் எவ்வளவு தூரம் பறந்தாலும்
நாங்கள் தொட்டுவிட முடியாது
அண்ணாந்து பார்த்து இரசிக்கும்
வானம் எங்கள் ஆசிரியர்கள்!...

**சா. பவித்ரா**
**இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# ஆசிரியர் திருநாள்

ஆசிரியர் திருநாள் இது ஆனந்தப் பெருநாள்!
அறிவுச் சுடரான ஆசிரியஅகல்களுக்கு
அர்பணிக்கும் பொன்னாள்!
சிறு வரியாய் இருந்த என்னை
சித்திரமாய் வரைந்தெடுத்த சிறப்பான ஓவியர்கள்!
வேரற்ற செடியினையும்
வேரூன்ற வைத்த வெற்றியாளர்கள்!
அணையாத நெருப்பாய்ச் சுட்டாலும்
அழகான தீபமாய் மாற்றி அழகு பார்த்த அன்பர்கள்!
மருந்தாய் நினைத்த கல்வியை இனிய மொழியால்
தேனாய் இதயம் சேர்த்த மருத்துவர்கள்!
பண்பெனும் பால் ஊட்டி அறிவெனும் நீரூற்றி
வளர்பிறையாய் வளர்த்தெடுக்கும் அன்னையர்கள்!
நின்பாத கமலங்களுக்கு என்பணிவான வணக்கங்கள்!
தங்கள் பணி சிறக்கட்டும்!
எங்கும் ஒழுக்கம் மிளிரட்டும்!
உங்கள் மனம் மகிழட்டும்!
தாய்மொழி தமிழைப் போல் உம் ஆயுளும் பணியும் நீடிக்கட்டும்!!

**சு. அருணிமா தேவி, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# ஓசந்த சாமி



நேரமில்லை நேரமில்லை ஏனோ நமக்கு
தாயை நேசிக்கவும் நேரமில்லை……
அலுவலக நேரத்துல கைபேசி அழைக்கும்
பணியின் அக்கறையில் நிறுத்துவதில்லை……
அம்மா அம்மா பாடலுந்தான் ஒலிக்கும்
அம்மாதான்னு பேசாம இருப்போம்……
அம்மா பாடல் மீண்டும் ஒலிக்கும்
அரை மனதாய் எடுப்போம்……
கண்ணா சாப்பிட்டியான்னு கேட்பாங்க அம்மா
சன்னக்குரலில் சாப்பிட்டேன் அம்மா……!
அம்மா பொறுப்பதுபோல் யார் இங்கே
அம்மாவின் பொறுப்பில் நன்றேயென்றும்……..!
இந்த அன்பு அம்மாவுக்கு முன்னால
ஓசந்த சாமி ஒண்ணுமில்லை…… !

**து. ஷர்மிளா**
**முதுகலை மனிதவள மேலாண்மை, இரண்டாமாண்டு**

# பெண்கள்



ஆணும் பெண்ணும் சமம்!
பெண்தானே என்று
தாழ்வாக நினைக்காதே!
பெண் ஒரு ரோஜா செடி!
துன்பம் வரும் நேரத்திலும்
சிரிக்கக் கற்றவள்!
அதுவே அத்துன்பத்திற்கான ஆயுதம்
எவரையும் வெற்றுக் காகிதம் என்றெண்ணாதே
ஒருநாள் பட்டமாய் பறப்பாள்!
நீயும் அண்ணார்ந்துதான் பார்க்க வேண்டும்
நிமிர்ந்த எண்ணம் நேர் கொண்ட பார்வையுடன்
உலகெங்கும் பெண்ணின் குரல் ஒலிக்க வேண்டும்!

**கு. ஆஷா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

# காற்று

என் சன்னல் தேடி வந்த காற்றே
என்னிடம் என்ன கூற வந்தாய் நீ
வரும் போது மலர்களோ தலை அசைக்கும்
என் மனமோ வயது மறந்து இளமையாகும்
உனக்காகக் காத்திருந்த
மொட்டுகளோ
உன் வருகை பார்த்துப் பூவாய்
மலரும்...
கையில் பிடிக்க முடியாத காற்றே!
என் மூச்சுடன் கலந்து - என்னை
உயிர் வாழ வைத்தாய் நீ!
வளர்ச்சிகள், நாகரிகங்கள் வளர! வளர!
இவ்வாறு ரசித்த உன்னை - என்
கண்கள் மறந்து விட்டு
மரங்களை அழித்து உந்தன் வலிமை குறைத்த
எங்களை மன்னிப்பாயாக!
உந்தன் மகிமை அறியாத எங்களுக்கு
பெருந்தொற்றினை அளித்து
உணர வைத்துவிட்டாய்
கண்ணுக்குத் தெரியாத காற்றே!
உலக மக்கள் உன்னைக் காசளித்து
வாங்கும் நிலையில் உள்ளோம்
உந்தன் வருகைக்கு விழிவைத்து காத்திருக்கும்
பல உயிர்களைக் காக்க திரும்பி வா!



த. மீனாட்சி, ஆங்கில இலக்கியம், இரண்டாமாண்டு

# மழை



கார்மேகம் சூழ!
சூரியன் அஞ்சி ஓட!
மழை வர!
என் காத்திருப்பு!
நீர் வளம் பெருகியது!
புதிய உருவம் கிடைத்தது!
என் வேண்டுதல் பலித்தது
என்றதாம் தென்னைமரம்!!!

**மு. ஹேமாபிரியா, இளம் வணிகவியல்**
**இரண்டாமாண்டு**

# அம்மா

பத்து மாதம் என்னைக் கருவில் சுமந்தாய்!
காலம் முழுவதும் உன் இதயத்தில் வைத்தாய்!
ஆயிரம் முறை காயப்படுத்தினாலும்
பலமுறை முகம் சுளித்தாலும்
பாசம் ஒன்றே பதிலாகத் தந்தாய்!
என் உறவு என் தாய் மட்டுமே……….
அன்பு மட்டுமே காட்டிய என் தாய்க்கு
என் மரணம் வரை அன்பை மட்டுமே
பரிசளிப்பேன் தினம் தினம்
கண் கலங்காமல் பார்த்துக் கொள்வேன்!!!
என்றென்றும் என் தாய்க்கு மகளாக நானே பிறந்து
முழு அன்பையும் ஏற்க விரும்புகிறேன்!

**ஆ. நிர்மலா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# அறிவியல் செய்திகள்

## அறிவியல் உலகில் ஹெலன் கால்டிகாட்

*குழந்தை உணவு முறை ஆய்வுகளில் சாதனை புரிந்தவர் ஹெலன் கால்டிகாட். இவர் 1988ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 7ஆம் நாள் மெல்போர்ன் நகரில் பிறந்தார். இவரது பெற்றோர் பிலிப் ப்ரோய் நோவ்ஸ்கி, மேரி கோப்பை ஆவர். தாயார் ஆடை அலங்கார நிபுணராகப் புகழ் பெற்றவர். இவருடைய கணவர் வில்லியம் கால்டிகாட் கதிர்வீச்சு மருத்துவர் ஆவார்.*

*ஹெலன், அணு ஆயுதக் கதிர் வீச்சால் ஏற்படும் தீமைகளைக் கண்டுபிடித்தார். குறிப்பாகக் குழந்தைகளுக்குச் சிட்ரிக் பைப்ரோஸில் என்ற புற்றுநோய் வருவதைக் கண்டறிந்தார்.*

*1972ஆம் ஆண்டு அடிலைட்டில் குழந்தைகளுக்குக் கைட்டின் பைப்ரோஸில் என்ற புற்றுநோய் தாக்கியது. அதனால் அடிலைட்டில் உள்ள குயின் எலிசபெத் மருத்துவமனையின் ஆய்வுக் கூடத்தில் இரவு, பகல் பார்க்காமல் குழந்தைகளின் இரத்த மாதிரிகள் பலவற்றை சோதனைகளுக்கு உட்படுத்தினார். இந்தச் சோதனைக்குத் தனது குழந்தைகளையும் உட்படுத்தினார். நச்சுக் கதிர் வீச்சின் கொடிய விளைவுகளைக் கண்டுபிடித்தார். உடனே, அரசு அவரது ஆய்வு முடிவுகளை வெளியிட தடை விதித்தது. ஒரு கட்டத்தில் அவரைக் கைது செய்யவும் முயன்றது. ஆனால் ஹெலன் அதற்கெல்லாம் அஞ்சாமல் பொது மக்களிடம் விழிப்புணர்வைத் தூண்டுவதிலேயே கவனமாக இருந்தார். அவருடைய பேச்சுக்கு மக்களிடம் இருந்து ஆதரவு கிடைத்தது. ஆஸ்திரேலிய அரசு அவரது ஆய்வை ஏற்றது. இதுவே அறிவியல் உலகில் இவர் செய்த பெரும் சாதனை ஆகும்.*

***"ஆசிரியர்கள், நான் நம்புகிறேன், சமுதாயத்தில் மிகவும் பொறுப்புள்ள மற்றும் முக்கியமான உறுப்பினர்கள், ஏனெனில் அவர்களுடைய தொழில் முயற்சிகள் பூமியின் தலைவிதியைப் பாதிக்கின்றன." என்பது ஆசிரியர்கள் குறித்து ஹெலன் கால்டிகாட்டின் கருத்தாகும்.***

**ர. சித்திகா பிர்தோஸ்**
**இளம் வணிகவியல், இரண்டாமாண்டு**

# மின்சார மீன்



- தென் அமெரிக்காவில் அமேசான் நதியில் மின்சார விலாங்கு மீன் என்ற ஒருவகை இனம் காணப்படுகிறது. இந்த மீன் தன்னை நெருங்குபவர்களின் உடலில் மின்சாரத்தைச் செலுத்தி அவர்களுக்குப் பயத்தை ஏற்படுத்துகிறது. மீனின் வால் பகுதி மிகவும் நீளமானது. நீண்ட வாலின் அடியில் மின்சக்தி உற்பத்தி செய்யும் உறுப்புகள் அமைந்துள்ளன.
- சுமார் 3 அடி நீளமுள்ள மீன் 500 வாட் முதல் 600 வாட் வரையிலான மின்சக்தியை உண்டாக்குகிறது என ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளனர். இந்த மின்சக்தியை வைத்து ஒரு சிறு வீட்டில் ஒரு மாத காலத்திற்கு விளக்கு எரிக்க முடியும். இம்மீன் எதிரிகள் நெருங்கி வரும்போது, தன்னிடமுள்ள மின்சக்தியினால் அதிர்ச்சி கொடுத்து எதிரிகளை விரட்டி விடுகிறது.
- மின்சார விலாங்கு மீனைவிட, மின் திருக்கைகள் என்ற மீன் வகை அதிக அளவில் மின் அதிர்ச்சியைத் தருகிறது. இது தட்டையான உடலமைப்பு உடையது. இதன் உடலில் அமைந்துள்ள தலையில் இரண்டு பக்கத்திலும் தனிப்பட்ட மின்சக்தி உறுப்புகள் அமைந்துள்ளன.
- இந்த உறுப்புகளில் நூற்றுக்கணக்கான மின்கலங்கள் உள்ளன. ஒரு பெரிய மீன் குவியலில், மின் திருக்கை, ஒன்று இருந்தாலும் இந்த மீனினால் ஏற்படும் மின் அதிர்ச்சி அருகிலிருக்கும் நபர்களைத் தாக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

**அ. விஜயசுந்தரி**
**இளமறிவியல் கணிதவியல்**
**மூன்றாமாண்டு**

# உணவே மருந்து... மருந்தே உணவு...

சித்த மருத்துவம்

## சித்த மருத்துவம்

**பிணிஇன்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்**
**அணிஎன்ப நாட்டிற்கு இவ்வைந்து**

நோயற்ற வாழ்வு, செல்வச்சிறப்பு, குறையாத விளைவு, வற்றாத இன்பம், தகர்க்க இயலாத பாதுகாப்பு ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகு தருவன எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். இக்குறளில் நோயற்ற வாழ்வினை வள்ளுவர் முதன்மை படுத்தியுள்ளார். உடல் நலத்தைத் தகுந்த முறையில் காக்கவும் நோயற்ற வாழ்விற்கும் ஆரோக்கியமான உணவு, மனவுறுதி, நம்பிக்கை தேவை. இவையல்லாமல் யோகாசனம், உடற்பயிற்சி, தியானம் என உடல்நலத்தின் மீது கூடுதல் கவனம் செலுத்தி உடலைப் பேணுவதால் சர்க்கரைநோய், செரிமான பிரச்சினை, இருதய நோய், உடல் எடை அதிகரிப்பு போன்ற நோய்களைத் தடுக்க முடியும்.

**உலகில் கடுகம் உடலின் நோய் மாற்றும்**
**அலகு இல் அகநோய் அகற்றும் – நிலைகொள்**
**திரிகடுகம் என்னும் திகழ் தமிழ்ச் சங்கம்**
**மருவு நல்லாதன் மருந்து**

இப்பாடலில் திரி என்றால் மூன்று என்றும் கடுகம் என்றால் காரம் என்றும் பொருள்படும். திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று மருந்து பொருட்களைக் குறிக்கின்றது.

**சுக்கு :** இஞ்சியை நன்கு உலர வைத்தால் சுக்கு கிடைக்கிறது. இதில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால், நமது உடலின் சீரண உறுப்புகளுக்கு ஏற்ற மருந்தாக இருக்கிறது.

**மிளகு :** மலைகளில் கொடி போல் படர்ந்து வளரக்கூடிய, மருந்துவ குணம் கொண்ட உணவுப் பொருள் மிளகாகும். இதன் சுவை காரம் ஆகும். மிளகு கெட்டக் கொழுப்பை நீக்கி இரத்தத்தைச் சுத்திகரிக்கும் பணியினைச் செய்கிறது.

**திப்பிலி :** திப்பிலி கொடி வகையைச் சேர்ந்தது. திப்பிலி செடியில் பூக்கள் மிகவும் சிறியதாக இருக்கும். முத்துக்கள் அடுக்கி வைத்தது போன்று காய்கள் காணப்பெறுகின்றன. இது நெஞ்சுச்சளியைக் கரைக்கக் கூடியது. மலச்சிக்கலை நீக்குகிறது. மூச்சுத் திணறலுக்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

**“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”** என்ற கூற்றிற்கு இணங்க நோயில்லாமல், உடல் ஆரோக்கியத்தின் மீது கூடுதல் கவனம் செலுத்தி, சுக்கு, மிளகு, திப்பிலியை அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வோம்.

**அ. ஸ்டெல்லாமேரி**
**முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு**

# உணவுப் பழமொழிகள்

- காட்டிலே புலியும் வீட்டிலே புளியும் ஆளைக்கொள்ளும்.
- சீரகம் இல்லா உணவும் சிறு குழந்தை இல்லா வீடும் சிறக்காது.
- பெரும் பஞ்சத்தை விட பெருந்தீனியே ஆளைக் கொள்ளும்.
- பாலுக்கு மிஞ்சின சுவையும் இல்லை பல்லக்கிற்கு மிஞ்சின சொகுசும் இல்லை.
- கடுக்காய் செய்யும் நன்மை தாயை விட அதிகம்.
- மருந்து கால் மதி முக்கால்.
- பொன்னாங்கன்னி மேனியைப் பொன்னாக்கும்.

**சா. பவித்ரா**
**இளங்கலைத் தமிழ்**
**இரண்டாமாண்டு**

# பண்டிகைகள் வரலாறு

## விநாயகர் சதுர்த்தி

விநாயகர் சதுர்த்தி என்பது விநாயகரின் பிறந்த நாள் விழாவாகும். ஆண்டுதோறும் ஆவணித் திங்கள் வளர்பிறைச் சதுர்த்தி நாளன்று கொண்டாடப்படுகிறது. இவ்விழா மகாராட்டிர மாநில மக்களின் குடும்ப விழாவாகக் குறிப்பிடப்படுகிறது.



**ஓவியம் - அ. தீபிகா**
**இளமறிவியல் கணினி அறிவியல் இரண்டாமாண்டு, சுழற்சி 2**

**விநாயகர் சதுர்த்தியின் முக்கியத்துவம்**

விநாயகர் சதுர்த்தி நாளன்று பிள்ளையாரை வழிபட்டால் எல்லா நன்மைகளும் கிடைக்கும் என்று சாத்திரங்கள் சொல்கின்றன. எந்தச் செயலைத் தொடங்கினாலும், விநாயகரை வழிப்பட்டுத் தொடங்குவது வழக்கமாக உள்ளது. எழுதும் போதும் பிள்ளையார் சுழி போட்டு எழுதும் வழக்கத்தால் நல்ல பலனைப் பெறலாம் என்பது நம்பிக்கை.

விநாயகர் வழிபாட்டில் தோப்புக்கரணம் போட்டு தலையில் குட்டிக் கொள்வது வழக்கமாக இருக்கிறது. **'தோர்பிகரணம்'** என்பது தோப்புக்காரணம் என வழங்கி வருகிறது. 'தோர்பி' என்பதற்கு 'கைகளில்' என்று பொருள், 'கர்ணம்' என்பதற்கு 'காது' என்று பொருள். தோப்புக்கரணம் என்பதற்குக் கைகளினால் காதுகளைப் பிடித்துக் கொள்ளுதல் என்பது பொருளாகும்.

கஜமுகாசூரன் என்ற அசுரனுக்குப் பயந்த தேவர்கள், அவனைப் பார்க்கும் போது அஞ்சி தலையில் குட்டிக் கொண்டார்கள். அந்த

அசுரனை விநாயகர் அழித்தார். எனவே, விநாயகர் முன்பு தேவர்கள் பக்தியுடன் தலையில் குட்டி, தோப்புக்கரணம் போட்டார்கள்.

சனியின் பிடியில் சிக்கியவர்களுக்கு அருள் கொடுப்பவர். சனி அவரைப் பிடிக்கும் பொழுது, 'இன்று போய் நாளை வா' என்று தந்திரத்தைக் கையாண்டவர் விநாயகப்பெருமான்.

முருகப்பெருமான், வள்ளியை மணம் முடிக்க விநாயகர் யானை வடிவில் வந்து உதவி செய்தார். இவ்வாறான பல புராணச் செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன.

தமிழ் நாட்டிலும் ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படுகிறது. களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர் உருவச் சிலைகளை வீட்டில் வைத்து, அருகம்புல், வன்னி இலை, வில்வ இலை, எருக்கம் பூ மாலை ஆகியவற்றை விநாயகருக்கு அணிவித்து அப்பம், கொழுக்கட்டை, மோதகம், அவல், பொரி, சர்க்கரைப் பொங்கல், சுண்டல், கொய்யாப்பழம், விளாம்பழம், கரும்பு, கம்பு, சோளம், களாக்காய் போன்றவற்றை பிள்ளையாருக்குப் படைத்து வழிபாடு செய்யப்படுகிறது.



**ஓவியம் – ஜெ. யமுனா தேவி**
**இளமறிவியல் கணினியியல்**
**இரண்டாமாண்டு**

வழிபாடு நடத்தப்பெற்ற விநாயகரின் உருவச் சிலை முதல் நாள், மூன்றாவது நாள், அல்லது ஐந்தாவது நாள் ஊருக்கு அருகில் உள்ள நீர்நிலைகளில் கரைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டியில் விநாயகருக்குக் கோயில் அமைந்துள்ளது.

**ரா. வைஷ்ணவி, இளம் வணிகவியல், மூன்றாமாண்டு**

# மொஹரம்



மொஹரம், முஃகர்ரம், முகரம் என்பது இசுலாமியர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக விளங்குகிறது. முஹர்ரம் இஸ்லாமிய ஆண்டின் முதலாவது மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அல்லாஹ் புனிதமாக்கிய சிறப்புற்ற நான்கு மாதங்களில் இம்மாதமும் ஒன்றாகும்.

**இசுலாமிய நாட்காட்டி மாதங்கள்**

1. முஃகர்ரம் ( மொஹரம்)
2. சஃபர்
3. ரபிஉல்அவ்வல்
4. ரபிஉல்ஆகிர்
5. ஜமா அத்துல்அவ்வல்
6. ஜமா அத்துல்ஆகிர்
7. ரஜப்
8. ஷஃபான்
9. ரமலான்
10. ஷவ்வால்
11. துல் கஃதா
12. துல் ஹிஜ்ஜா

**மொஹரம் திருநாள் கொண்டாடப்படுவதற்கான காரணங்கள்**

மொஹரம் திருநாள் இசுலாமியர்களால் கொண்டாடப்படுகின்றது. சில காரணங்களுக்காக மொஹரம் தினத்தைக் கொண்டாட்டமாகவும் சிலர் துக்கத் தினமாகவும் கடைபிடிக்கின்றனர். இஸ்லாமியர் இரண்டு வகை பிரிவில் உள்ளனர். ஒன்று ஷியா மற்றொன்று சன்னி பிரிவு. இந்த

இரண்டு பிரிவு இஸ்லாமியர்களும் சில வேறுபட்ட காரணங்களுக்காக மொஹரம் தினத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.

மொஹரம் பண்டிகையை ஷியா பிரிவினர் கர்பாலா போரில் முகமது நபியின் பேரனான ஹூசைன் இபீனு அலி கொல்லப்பட்டதை முன்னிட்டு துக்க நாளாகக் கடைபிடிக்கின்றனர். சன்னி பிரிவினர் எகிப்திய அரசை வெற்றிக் கொண்ட நாளாகக் கொண்டாடுகின்றனர்.

**சந்திர நாட்காட்டி**

இசுலாமியர்கள் பயன்படுத்தும் நாட்காட்டி சந்திர நாட்காட்டி ஆகும். இந்நாட்காட்டி சந்திரனின் அடிப்படையில் அமைந்துள்ளது. சந்திரனின் ஓட்டத்தை வைத்தே ஒரு மாதத்தில் எத்தனை நாட்கள் இருக்கின்றன என்பது கணக்கிடப்படும். இசுலாமியர்களின் பண்டிகைகளும் இந்தச் சந்திரநாட்காட்டியின் மூலமாகவே கணக்கிடப்படுகின்றது.

இந்தப் புண்ணிய மாதத்தில் சண்டைகள் மற்றும் புனிதப்போர் புரிவதற்கும் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த நாளில் நோன்பு இருப்பதால் வாழ்வு வளமையாகும் என்பது இசுலாமியர்களின் நம்பிக்கை. மொஹரம் மாதத்தின் பத்தாவது நாள் (அரபு மொழியில் ஆசுரா) தியாகத் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

**உண்ணா நோன்பு**

இசுலாமியர்கள் மொஹரம் பண்டிகை மாதத்தின், ஒன்பது மற்றும் பத்தாம் நாள் மட்டும் உண்ணா நோன்பு இருப்பதை வழக்கமாக வைத்துள்ளனர். ஆசுரா மொஹரம் பண்டிகையின் பத்தாவது நாளாகும். நபிகள் நாயகம் தானும் நோன்பிருந்து தன் நண்பர்களையும் நோன்பு இருக்கும்படி கூறியதால் ஆசுரா தினத்தன்று இசுலாமியர்கள் நோன்பு நோற்கிறார்கள்.

## மொஹரம் மாதத்தின் சிறப்பான நிகழ்வுகள்

ஜப், துல்கஅதா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய நான்கு மாதங்களும் சிறப்புற்ற மாதங்களாகும். இதில் மிகவும் சிறப்பு வாய்ந்தது முஹர்ரம்

மாதம். முஹர்ரம் மாதத்தில் நபிமார்கள் வாழ்வில் நிகழ்ந்த பல வரலாற்றுச் சரிதைகளை அண்ணல் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் வழியாக அறிகின்றோம். இம்மாதத்தில் போர் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இறைவனால் தடுக்கப்பட்ட பழத்தைச் சாப்பிட்டதால் சொர்க்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆதாம், ஹவ்வா ஆகியோர் தங்கள் செயலுக்கு மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்பு கேட்டனர். அல்லாஹ் அவர்களை மன்னித்து தூய்மைப்படுத்தியது, இந்த முஹர்ரம் மாதத்தின் பத்ததாவது நாள் அன்றே ஆகும். இறைவன் மட்டுமே மன்னிக்கும் குணத்தையும் கருணையையும் நிறைவாகக் கொண்டவர் ஆவார். பின்னர் ஆதாம் சில வாக்கியங்களை இறைவனிடத்தில் கற்றுக்கொண்டார். வாக்கியங்களைக் கொண்டு அவர் பிரார்த்தனை செய்த வண்ணமாகவே இருந்தார்.

பிரவுன் என்ற கொடுங்கோல் மன்னனை எதிர்த்து மூஸாநபிகள் போராடினார்கள். பிரவுன், தானே கடவுள் என்று இசுரவேலர்களை அடிமைப்படுத்தி வாழ்ந்து வந்தான். பெரும் போராட்டத்திற்குப் பின் இசுரவேலர்களைக் காப்பாற்றி அழைத்துச் சென்றார்கள். பிரவுன் படையும் அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டியது. இடையே கடல் குறுக்கிடவே அல்லாவின் கட்டளைப்படி மூஸாநபியும், இசுரவேலர்களும் கடலில் இறங்கினார்கள். கடலும் பிளந்து அவர்களுக்கு வழி அமைத்துக் கொடுத்தது. பின்தொடர்ந்து வந்த பிரவுனும் அவனது படையும் கடலில் இறங்கினர். மூஸாநபியின் கூட்டம் கரையேறியதும் பிரவுனும் அவன் படையினரும் அல்லாவின் கட்டளைப்படி கடலில் மூழ்கி அழிந்து போயினர்.

மூஸாநபியையும் இஸ்ரவேலர்களையும் கடலைப் பிளந்து காப்பாற்றிய அந்த நிகழ்வும் முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் இரவில் நடந்ததாகக் குறிப்புகள் கிடைக்கின்றன.



ஒரு முறை நபிகள் நாயகம் மதினா நகரத்து வீதியில் உலா வரும் போது, யூதர்கள் அனைவரும் அன்று நோன்பு இருப்பதை அறிந்தார்கள். ஏன் எல்லோரும் நோன்பு இருக்கிறார்கள் என்று வினவிய போது முஸாநபிகளும் எங்களது முன்னோர்களும் அல்லாவால் கடலைப் பிளந்து காப்பாற்றப்பட்ட முஹர்ரம் பத்தாம் நாளை அவர்கள் நினைவு கொண்டு நன்றி செலுத்துவதற்காக நோன்பு இருக்கின்றோம் என்றார்கள். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் உங்களை விட மூஸாநபியை உரிமை கொண்டாட முசுலிம்களுக்குத்தான் அதிக முன்னுரிமை உண்டு. எனவே இன்ஷாஅல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) வரும் ஆண்டு நான் உயிரோடு இருந்தால் உங்களைவிட அதிகமான இரண்டு நாட்கள் நோன்பு இருப்பேன் என்றார்கள்.

ஆனால் அடுத்த ஆண்டு அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். அண்ணலார் சொன்னதை நினைத்து கொண்டு எல்லா இசுலாமியரும் முஹர்ரம் மாதத்தில் இரு நாட்கள் நோன்பு இருந்து வருகின்றார்கள்.


ஐயூப்நபியின் நோய் நீங்கிய நல்ல நாளும் முஹர்ரம் பத்தாம் நாள்தான். மீன் வயிற்றில் குடியிருந்த யூனுஸ் நபியவர்கள் மீண்டும் உலகில் வந்து அவதரித்த நாளும் முஹர்ரம் பத்தாம் நாள் அன்றுதான். இது போன்று இன்னும் பல சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் இந்த நாளில் நிகழ்ந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் உண்டு. யூதர்களுக்கும் இசுலாமியர்களுக்கும் வேறுபாட்டை ஏற்படுத்தும் வகையில் ஒன்பது, பத்து அல்லது பத்து, பதினொன்று ஆகிய இரு நாட்கள் இசுலாமியர்கள் நோன்பு இருக்கின்றனர்.

**அ. பெனாசிர் பாத்திமா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு.**

# விடுகதைகள்


1. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான். அவன் யார்?
2. ஆயிரம் அறைகள் கொண்ட பிரம்மாண்டமான மிட்டாய் கடை எது?
3. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன?
4. தொடாமல் அழுவான் தொட்டால் பேசுவான் அவன் யார்?
5. ஆலமரம் தூங்க அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க திரு பார் கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்?
6. கடைசி வார்த்தையில் மானம் உண்டு, முதல் வார்த்தையில் மென்மைக்காக இறந்த பூச்சியின் பாதி. காஞ்சி நகரத்தான் நான் யார்?
7. சொன்ன நேரத்துக்கு தொண்டை கிழிய கத்துவான். அவன் யார்?
8. குண்டன் குழியில் விழுவான், குச்சியன் தூக்கி விடுவான் அது என்ன?
9. எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு அது என்ன?
10. மீன் பிடிக்கத் தெரியாதாம் ஆனால் வலை பின்னுவானாம் அவன் யார்?

ம. இராஜலட்சுமி
இளங்கலைத்தமிழ்
இரண்டாமாண்டு




து. ஷர்மிளா
முதுகலை மனிதவள
மேலாண்மையியல், இரண்டாமாண்டு

**கடித இலக்கியம்**



# தோழிக்குக் கடிதம்

## என் முடிவில்லா காதல்

அன்புள்ள தோழி மற்றும் என் தங்கையான ராதாவுக்கு, பிரியா எழுதுவது. நலம், நலமறிய ஆவல். பெற்றோர் மற்றும் அனைவரும் நலம் தானே. சென்ற வாரம் நீ எனக்கு எழுதிய கடிதத்தைப் படித்தேன். பத்தாம் வகுப்பில் நீ நல்ல மதிப்பெண்கள் எடுத்து இருந்தாய் அதற்கு என்னுடைய வாழ்த்துகள். பிறகு, உன் கடிதத்தில் பாடப்பகுதியில் உள்ள புதிய செய்யுள் பாடல்கள் கடினமாக இருக்கிறது என்றாய். பின் நான் எப்படி எனது பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் நல்ல மதிப்பெண் எடுக்க முடிந்தது என்று கேட்டு இருந்தாய். இதோ எனது பதில்.

அதற்கு மூலக்காரணம் என் காதலன். அவன் யார் என்று கூறுவதற்கு முன்பு அவனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். முதலில் எனக்கு அவனைப் பார்த்தால் ஒன்றும் புரியாது. அவனிடம் பேசவே தோன்றாது. அவன் என் வாழ்க்கையில் மிகப் பெரிய சவாலாக இருந்தான். அவனைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டேன். ஆதலால் அவனைக் காதலிக்கத் தொடங்கினேன். அதுதான் நான் செய்த மிகப் பெரிய தவறு. அவனைக் காதலிக்க வேண்டுமானால் முதலில் அவனைப் புரிந்துகொள்ள வேண்டும். அவனைப் பார்ப்பதற்கு ஆர்வம், கவனம், ஆசை, கடமை ஆகியவை இருந்தால்தான் அவனைக் காதலிக்க முடியும். இவ்வுலகில் மிகப் பெரிய அறிவியல் அவன்தான். ஆதலால், நான் அவனை ஆர்வம் மற்றும் கவனத்துடன் நோக்கினேன். அவனைப் புரிந்து கொண்டேன் காதலிக்கத் தொடங்கினேன்.

அவன் எழுத்து வழியாக எல்லோரிடமும் பேசுவான். நானும் அவனது எழுத்து வழியாகவே அனைவரிடமும் பேசுவேன். உலகின் அனைத்து மொழியையும் அறிந்தவன். நான் அவனை எனது ஒன்பதாம் வகுப்பில் காதலிக்கத் தொடங்கினேன். இன்னும் என் திருமணத்திற்குப் பிறகும் அவனை நான் காதலிக்கிறேன். அவனுக்கு இனம், மதம் என்னும் பிரிவே கிடையாது. இன்று கணினி வாயிலாக அனைத்தையும் அறிந்து கொள்கிறோம். ஆனால் அன்று அப்படியில்லை. இன்று மின்னஞ்சல்,

தொலைபேசி, புலனம், முகநூல் எனத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள பல வசதிகள் உள்ளன.

ஆனால் அன்று கடிதம் ஒன்றே இருந்தது. இன்று கடிதம் என்ற சொல்லை நாம் மறந்துவிட்டோம். அன்று இவை அனைத்தும் இல்லாததால் தான் நான் அவனை காதலிக்க நேர்ந்தது. அவன் உனக்கு மிகக் சிறந்த தோழனாக இருப்பான். ஏன் என்று தெரியுமா? ஏனெனில் அவன் மட்டுமே இவ்வுலகில் உண்மை பேசுவான். அவனுக்குப் பல பெயர்கள் உள்ளன. அவனை அனைவரும் ஓலைச்சுவடி, நூல், பனுவல் என்று பலவகையாக அழைத்தனர். தற்போது அவனை எல்லோரும் புத்தகம் என்று அழைக்கின்றனர். நான் எழுதியதைப் புரிந்துகொண்டிருப்பாய் என்று நம்புகின்றேன்.

இப்படிக்கு
உன் அன்புத் தோழி,
பிரியா

**மு. ஹேமா பிரியா , இளம் வணிகவியல், இரண்டாமாண்டு**

# பொன்மொழிகள்

## டாக்டர். இராதாகிருஷ்ணன்

- ஆசிரியர் இறந்த காலத்தைக் கண்முன் கொண்டு வருகிறார். நிகழ்காலத்தை வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறார். எதிர்காலத்தை வளமுள்ளதாக ஆக்குகிறார்.
- அறிந்து கொள்ள முயற்சிப்பதே அறியாமையிலிருந்து விடுபடும் வழியாகும்.
- நல்ல பழக்கத்தையும் நாகரிகமான நடத்தையையும் கொண்டுள்ள பண்புள்ள மக்களை உருவாக்குவதே கல்வியின் நோக்கம்.
- வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.
- நம்முடைய பழக்க வழக்கங்கள் ஒழுங்காக இருந்தால் நமக்குப் பேராசை வராது. போதும் என்ற மனமே மிகவும் சிறந்த வரமாகும்.

**மோ. திவ்யபாரதி**
**இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

# சிறுகதைகள்

## உதவும் குணம் வேண்டும்!...



பள்ளிக்கூடத்துக்கு நேரம் ஆயிடுச்சி என்று முணுமுணுத்தவாறு மிகவும் பதட்டத்துடன் வேகமாகச் சாலையில் நடந்தான் ராமு. அப்போது தான் அதைக் கண்டான். ஒரு முதியவர் தன் பேத்தியுடன் நடந்து வரும் போது திடீரென நிலை தடுமாறி மயங்கி விழுந்தார். இதனைக் கண்ட அந்த பேத்தி, தாத்தா தாத்தா என அழத்தொடங்கினாள்! இச்சம்பவத்தைக் கண்ட ராமுவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை!

ஆனால் அவன் அந்த முதியவருக்கும், குழந்தைக்கும் உதவ வேண்டும் என எண்ணினான். உடனே வேகமாகச் சென்று தன்னிடம் உள்ள தண்ணீரை எடுத்து அந்த முதியவரின் முகத்தில் தெளித்து எழுப்பினான். பிறகு அவருக்குக் குடிக்க குளிர்ப்பானம் வாங்கிக்கொடுத்து குடிக்க வைத்து, அவர்களுடைய வீட்டு முகவரியை அறிந்துக் கொண்டு அவரையும் அந்தக் குழந்தையையும் அவர்களுடைய வீட்டில் கொண்டு சேர்த்தான்.

பின்னர், ராமு பள்ளிக்கு மிக வேகமாக விரைந்தான். அப்பொழுது ஆசிரியர் அவனிடம் ஏன் தாமதம் எனக் கேட்டார். அப்பொழுது நடந்த அனைத்தையும் ராமு கூறினான். இதுவே கடைசி, என வகுப்பில் அனுமதித்தார். மறுநாள் காலையில் நேரத்தோடு பள்ளிக்கு வந்தான் ராமு. பள்ளியில் வழிப்பாட்டுக் கூட்டம் நடந்தது. அப்பொழுது பேசிய ஆசிரியர் ராமுவை அழைத்தார். எதற்கு கூப்பிடுக்கிறார்கள் என்று மனதில் எண்ணியவாறு ஆசிரியரிடம் சென்றான். அப்பொழுது அந்த ஆசிரியர் ராமுவைச் சுட்டிக்காட்டி, அவன் அந்த முதியவருக்கு செய்த உதவியை எடுத்துக்கூறி அவனைப் புகழ்ந்தார்!!! மேலும் ராமுவைப் போல அனைவருக்கும் உதவும் குணம் வேண்டும் என்று மற்ற மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்....

**உரிய நேரத்தில் செய்யும் உதவியினால்**
**மனிதன் கடவுளுக்கு இணையாவான்!!!**
**மற்றவருக்கு உதவி செய்வோம்...... மனிதனை நேசிப்போம்......**

**பா.லோகேஸ்வரி**
**இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# உதவித்தொகை

## (இக்கதை ஒரு பெண்குழந்தையின் வாழ்க்கை)



ஒரு குடும்பத்தில் ஆணுக்குப் பெண் தேடுகின்றனர். அந்த ஆண் இராவணுத்தில் வேலை பார்பவர். அவருக்குக் குடிக்கும் பழக்கம் இருந்தது. இந்தக் காரணத்தால் அவருக்குப் பெண் தர யாரும் முன் வரவில்லை. பின்னர் அந்த ஆணுக்கு அவரது அக்காவின் மகளைக் கேட்டனர். அவர்களோ, தம்பிக்குப் பெண்ணைத் திருமணம் செய்துக் கொடுத்தால் திருந்தி விடுவான் என்று சம்மதித்தாள்.

ஒரு வருடம் கழித்து, திருமணம் செய்தனர். அந்த ஆணுக்குத் திருமணத்தில் பெரிதும் விருப்பமில்லை. ஆனால் பெற்றோர்களுக்காக அவர்கள் இருவரும் சேர்ந்தனர். அந்த ஆணோ குடித்தால் என்ன செய்வார் என்று அவருக்கே தெரியாது. அந்தப் பெண்ணை அடித்து கொடுமைப்படுத்தினார். அவளோ தாங்க முடியாமல் பெற்றோர் வீட்டுக்கே சென்று விட்டாள். அந்த ஆணும் அவளைத் தேடித் திரும்பி வரவில்லை. அந்தப் பெண்ணை ஊரார் அனைவரும் சொற்களாலே காயப்படுத்தினார்கள். பின்பு நான்கு வருடங்கள் கழித்து உறவினர்கள் ஒன்று சேர்ந்து அவர்களிடம் பேசி, ஒன்றாக வாழ செய்தனர். ஆனால் அந்த ஆணுக்கு ஒரு வாரத்திற்கு மேல் குடிக்காமல் இருக்க முடியவில்லை. அதனால் அவர் அவரது ஊருக்கே யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் சென்று விட்டார். அவளோ மிகுந்த வருத்தத்தோடு வீட்டு வேலை செய்து வாழ்ந்தாள்.

இரண்டு மாதங்களுக்குப் பின்பு அந்தப் பெண் ஒரு நாள் மயங்கி விழுந்தாள். என்னவென்று அவளை மருத்துவரிடம் அழைத்துச்

சென்றனர். அப்போது அந்த மருத்துவர் அந்தத் தந்தையிடம், உங்கள் மகள் கருத்தரித்து இருக்கிறாள் என்று கூற, அவளது தந்தை, அந்தக் குழந்தையை வளர்க்க இயலாத நிலைமையில் உள்ளோம், அந்தக் கருவை அழித்துவிடுங்கள் என்று சொன்னார். அந்த மருத்துவரும் அவரின் பேச்சுபடி கருக்கலைப்பு மாத்திரை கொடுத்தார். அந்தப் பெண் இரண்டு நாள் அந்த மாத்திரையைச் சாப்பிட்டாள். இரண்டு மாதங்கள் கழித்தும் வித்தியாசம் தெரியாததால் மீண்டும் மருத்துவரிடம் சென்றனர். அப்போதுதான் தெரிந்தது அவர் கொடுத்தது வைட்டமின் மாத்திரை என்று..... அப்போது அப்பெண் மிகவும் அதிர்ச்சியடைந்தாள். ஆறு மாதங்கள் கழித்து ஒரு குழந்தையைப் பெற்றாள்! வீட்டில் குழந்தையைப் பார்த்துக்கொள்ள யாரும் இல்லாததால் வீட்டு வேலைக்குக் குழந்தையையும் எடுத்துச் செல்வாள். இப்படியே நான்கு வருடங்கள் கழிந்தன. குழந்தை வளர்ந்தது. அந்தக் குழந்தையைப் பள்ளியில் சேர்த்தாள். பின்பு பணத்தேவை அதிகமானதால் துணிகள் ஏற்றுமதி செய்யும் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தாள். அந்தக் குழந்தையும் தாயின் துன்பத்தை உணர்ந்து நன்கு படித்தாள். எட்டாம் வகுப்பில் தேசியத் திறனாய்வுத் தேர்வில் சென்னை அளவில் தேர்ச்சி பெற்றாள். நல்ல மதிப்பெண்களோடு பத்தாம் வகுப்பு முடித்து, பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கும்போது தனக்கென்று எதுவும் செய்யாத தந்தையை இழந்து, ஒற்றைப் பெற்றோரிடம் வளரும் குழந்தைகளுக்கு உதவும் அமைப்பின் உதவித்தொகையைப் பெற்றாள்.

அக்குழந்தை. இன்று கல்லூரியிலும் நன்கு படித்து வருகிறாள். தினமும் உதவித்தொகைக் கொடுக்கும் அமைப்புக்கு நன்றி சொல்லிக் கொண்டே இருக்கிறாள். அந்தக் குழந்தை வேறு யாரும் இல்லை, நான்தான்!!!


**யமுனா. ஹ**
**இளமறிவியல் கணிதவியல்**
**மூன்றாமாண்டு**

# தகவல் களஞ்சியம்

## மண்டலா ஓவியம்

- ஆசியப் பண்பாட்டில் ஓர் ஆன்மீக மற்றும் சடங்கு சின்னமாக மண்டலா ஓவியம் உள்ளது.
- மனிதர்களால் உருவாக்கப்பட்ட மிகப் பழமையான கலை வடிவங்களில் மண்டலங்கள் காணப்படுகின்றன.
- ஓவியங்கள் பல்வேறு மத மரபுகள், தியானம் மற்றும் நவீன சூழல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.
- இன்று நோயாளியின் சிகிச்சையில் மண்டலங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.
- நான் வரைந்த வட்ட மண்டலா ஓவியம் நம்மை முழுமையாக ஒற்றுமைப்படுத்தும் சின்னமாகத் திகழ்கிறது.

**நான் வரைந்த மண்டலம் உங்களுக்காக**



**ஜெ. ஜனனி**
**இளம் வணிகவியல்**
**இரண்டாமாண்டு**



**மோ. காயத்ரி**
**இளம் வணிகவியல்**
**இரண்டாமாண்டு**

**சு. மீனா**
**முதுஅறிவியல் கணிதவியல்**
**இரண்டாமாண்டு**



## பேராசிரியர் பக்கம்

# எங்கள் ஐயா கா. செல்லப்பன்



**இரவீந்திரநாத் தாகூரின் கோரா புதினத்தைத் தமிழ் மொழியில் சிறப்பாக மொழிபெயர்ப்பு செய்துள்ளமைக்காக ஐயா அவர்களுக்கு 2021ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18ஆம் நாள் சாகித்திய அகாதமி விருது அறிவிக்கப்பட்டது.**

*சமூக உணர்வுள்ள கல்வியாளர்!*
*சமுதாய ஒற்றுமையை நாடும் சிந்தனையாளர்!*
*குடும்ப விளக்கின் அங்கமாய்*
*என்னை மேம்படுத்திய மாபெரும் உழைப்பாளர்!*
*சொல், செயல், சிந்தனை அனைத்திலும்*
*இலக்கியம் ததும்பும் எழுச்சியாளர்!*
*பன்மொழி இலக்கியங்களைப் பாங்குற வாசித்த பண்பாளர்!*
*தினமணி* ***'ஜனசக்தி'*** *நாளிதழில் தன்னை*
*வெளிப்படுத்திக் கொண்ட மாபெரும் கல்வியாளர்!*
*இந்திய கவிஞர்களைத் தனக்கு வசமாக்கி*
*இலக்கியங்களை வாசித்த மாபெரும் அறிஞர்!*
*ஆங்கில கவிஞர்களைத் தன் அகராதிக்குள்*
*அடக்கி அவர்களைத் தன் வசம் செய்த ஓவிய அறிஞர்!*
*மதம் தாண்டிய மனிதநேய சிந்தனையாளர்!*
*இயற்கையை அணுஅணுவாய் நேசித்த தகைமையாளர்!*
*புதிய உலகில் பழைய ஏடுகளோடு பயணம்*
*செய்து மாபெரும் பயண இலக்கியத்தை*
*உருவாக்கி தேசத்தைத் தலை நிமிரச் செய்தவர்!*
*புரட்சி வித்துக்களைத் தூவி தமிழ்த் தென்றலாய்*

இன்றும் வலம் வருபவர்!
எங்கள் ஐயா **கா.செல்லப்பன்**
கீதாஞ்சலிக்கே கவிதாஞ்சலியைச் சமர்பணம் செய்தவர்!
மொழியும் சமூக மாற்றமுமே மனிதனை
மேம்படுத்தும் என மானிட சமுதாயத்தை
மேன்மையுறச் செய்த மாபெரும் மானுடவியல் அறிஞர்!
தமிழ்க் கல்வி தழைத்திட தமிழகம்
மேன்மையுற இன்று வரை ஓயாத
உற்சாகத்தோடும் உன்னத மேன்மையோடும்
மொழிப்பெயர்ப்புப் பணியினைத் தன்கையில்
எடுத்து காவியம் படைத்த எங்கள்
ஐயா **கா.செல்லப்பன்** அவர்களை
வாழ்த்த வார்த்தைகள் இல்லை
வயதும் இல்லை
தமிழால் தலை வணங்கி மகிழ்கிறேன்!
எங்கள் ஐயாவின்
இமாலய இலக்கியப் பணியைக் கண்டு!!



**பேரா. ம. விஜயசுமதி**
**நிர்வாகவியல் துறைத்தலைவர்**

# கல்வி என்னும் சக்தி

**“கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம்”** என்பது நெல்சன் மண்டேலாவின் வாக்கு. ஒரு மரத்திற்கு எப்படி வேர் முக்கியமோ அதே போலத்தான் மனிதனுக்கு இன்றைய வாழ்க்கை முறையில் கல்வி என்பது ஓர் அடிப்படை தேவையாக மாறிவிட்டது.

ஏட்டிலும் எழுத்தாணியிலும் தொடங்கிய கல்வி இன்று தொடுதிரையிலும் இணையத்திலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இக்கல்வியானது சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருக்கும் மனிதனை உயர்நிலைக்குக் கொண்டு வந்து இச்சமுதாயத்தில் அவனை மாண்புடன் ஒளிரச் செய்கிறது. இக்கல்வியின் சிறப்பினைப் போற்றும் சில கவிதைகள்,

“கல்வி என்னும் கற்கண்டு
உன் வாழ்வைக் கற்பக விருட்சம்

போல் வளரச் செய்யும்"

"ஏடுகள் பல நீ புரட்டியதனால்
ஏற்றம் கண்டது உன் வாழ்க்கை"

"அள்ள அள்ள குறையாத
அட்சய பாத்திரமே கல்வி"

"அறிவு என்னும் பெட்டகத்தைத்
திறக்க உதவும் ஒரே சாவி
கல்வி மட்டுந்தான்"



பேரா. ஸ். ஜோசப் பென்ஸி பிரிஸ்கா
பொருளாதாரத் துறைத்தலைவர்

"கல்வியை வேதனை என்று
எண்ணாமல்
சாதனையாக்கும் போது
உன் போதனை உலகை எட்டும்"

"உன் லட்சியத்தின் நுழைவு
வாயில்தான் பள்ளி"

"வெறும் எழுத்துக்களைக் கற்றுக் கொள்வது
கல்வி ஆகாது அது நல்ல
நடத்தையை உருவாக்க வேண்டும்
அது கடமையைச் செய்யும்
அறிவினை ஊட்டுவதாக அமைய வேண்டும்"

இத்தகைய கல்வியை நாம் பல வழிகளில் கற்க வேண்டும் என்பதனை, கால் பகுதியை ஆசிரியரிடமிருந்து கற்கிறேன். கால் பகுதியை ஒத்த வயதினரிடமிருந்து கற்கிறேன். கால் பகுதியை நான் சுயமாகக் கற்பதன் மூலம் கேட்கிறேன்

ஆகவே நம்மை வாழ்வின் உண்மை நோக்கத்திற்கு இட்டுச்செல்லும் கல்வியை உயிர் மூச்சைப் போல் போற்றுவோம். கண்டதைக் கற்க பண்டிதன் ஆவான் என்பதற்கிணங்க நல்ல புத்தகங்களை நாளும் படித்து அறியாதவற்றை அறிந்து இத்தகவல் யுகத்தில் சிறப்போம்.

# தூரிகைத் தூறல்கள்



ஏ. கீர்த்தனா
இளமறிவியல் உளவியல்
இரண்டாமாண்டு

ஜெ. ஜனனி
இளம் வணிகவியல்
இரண்டாமாண்டு







**ஜெ. சிவாரஞ்சனி**
**இளம் வணிகவியல்**
**மூன்றாமாண்டு**

**ர. நந்தினி**
**இளம் வணிகவியல்**
**கணக்கியல் நிதி, சுழற்சி 2**
**மூன்றாமாண்டு**





ஏ. வினோதினி
இளம் வணிகவியல்
கணக்கியல் நிதி, சுழற்சி 2
மூன்றாமாண்டு

ம. லாவண்யா
நிர்வாகவியல்
இரண்டாமாண்டு





**சா. சஜிதா**
**முது அறிவியல் கணினி அறிவியல் - சுழற்சி 2**
**இரண்டாமாண்டு**

## விடுகதை - விடைகள்

| | |
|---|---|
| 1. வெங்காயம் | 2. தேன் கூடு |
| 3. விரல்கள் | 4. தொலைபேசி |
| 5. மூச்சு | 6. பட்டுத்துணி |
| 7. அலாரம் | 8. பணியாரம் |
| 9. நண்டு | 10. சிலந்தி |

# சொல் விளையாட்டு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | அ | லை | யோ | சை | த | லி | யா | வீ | டி |
| ல் | ரு | கி | அ | ந | ம | ம் | க | ர | ண |
| கி | து | ணா | ல | மு | டு | ல | கு | மா | ஜா |
| ஊ | இ | ர | மி | ன் | நே | த | லு | மு | டி |
| ல் | சு | ஜா | தா | ர் | த | ந் | வ | னி | யோ |
| யு | லா | ப் | தே | லு | த | கு | உ | வ | கை |
| பா | ம் | று | கு | ரா | சு | சா | மே | ர் | சு |
| கு | ல் | ய | வி | க | ட | நா | க | ரி | ந |
| டு | மெ | ஒ | ம் | வோ | கு | ப | ஐ | ர | அ |
| நு | ட | ம் | பா | சா | ரி | வி | லா | ச | ம் |

## கட்டத்திற்குள் கண்டுபிடி

1. தமிழ்நாட்டின் ஹட்லி சேஸ்.
2. இந்திய சுதந்திரப் போராட்டப் பின்னணியில் எழுதப்பட்ட நாவல்.
3. தமிழில் முதன் முதலில் தோன்றிய நாடகம்.
4. மறைமலையடிகள் மொழிபெயர்த்து எழுதிய நாடக நூல்.
5. தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் எழுதிய நூல்.
6. ஹைகூ கவிதையின் தமிழ்ப்பெயர்.
7. ஞானபீட பரிசைப் பெற்ற முதல் தமிழ் நாவலாசிரியர்.
8. பரிதிமாற்கலைஞரின் நாடக இலக்கண நூல்.
9. தமிழ் உரைநடையின் தந்தை.
10. தமிழ் நாட்டின் வால்டர் ஸ்காட் எனப்படுபவர்.

வெ. சுஷ்மிதா, முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு

# முன்னாள் முத்துகள்



கு. பாரதி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
(2014 முதல் 2019 வரை பயின்றவர்)

***(கூட்டுக் குடும்பத்தில் வாழ்வோருக்குத் தாத்தா, பாட்டியின் அன்பு விலைமதிப்பற்றது. அந்த வகையில் என் தாத்தா பாட்டியை வைத்து ஆத்திச்சூடி வடிவில் என் கவிதை!)***

## தாத்தா பாட்டியின் அன்பு

*அன்போடு அறிவூட்டுபவர் என் தாத்தா!*
*ஆசையோடு ஆக்கம் தருபவர் என் பாட்டி!*
*இணையில்லா பேரன்பர் என் தாத்தா!*
*ஈன்றெடுக்காத இன்னொரு தாய் என் பாட்டி!*
*உற்சாகத்தின் உறுதியாளர் என் தாத்தா!*
*ஊக்கமளித்து உதவி செய்வார் என் பாட்டி!*
*எழுச்சியை என்னுள் விதைப்பார் தாத்தா!*
*ஏராளப் பண்புகளை வளர்ப்பார் பாட்டி!*
*ஐயத்தைத் தீர்த்திடுவார் தாத்தா!*
*ஒற்றுமையைக் காத்திடுவார் பாட்டி!*
*ஓராயிரம் நன்மைகள் தருவார் தாத்தா!*
*ஔஷதமாய் மாறுவார் என் பாட்டி!*



# உறங்கியது போதும்

***(சோம்பல் கொண்டு காலத்தைக் கழிப்போரின் சிந்தனைகளைத் தட்டி எழுப்புவதாய் அமைவது இக்கவிதை!)***

*உலக அறிவை வளர்க்காமல் ஏனோ
உலகம் அழைக்கிறது என்று உலாவி
குறட்டை விடுகின்ற சோம்பல் மனமே
உறங்கியது போதும் ….*

*காலம் இருக்கிறது பார்க்கலாம் என்று
உலகோடு ஒன்றாமல் நின்றுகொண்டு காலம்
மறந்து நிலையைத் துறந்து சிலையாய்
உறங்கியது போதும்……*

*நடப்பது ஏதோ நடக்கட்டும் என்று
கடந்திட்ட காலம் மிகுதி
தடங்கலைத் தகர்த்து எறிந்திட எழுவாய்
உறங்கியது போதும்…….*

*இந்த உலகோடு போட்டியிடாமல்
உலக அறிவை வளர்த்திடாமல்
அடுத்த செயலைத் தெரிந்துக்கொள்ளாத சிந்தையே நீ
உறங்கியது போதும்…….*

*வெற்றியென்னும் பலப் படிகளைத் தாண்ட
முயற்சி என்னும் முதல் படியையும் அதற்கான
வாய்ப்பு என்னும் தரைமட்டத்தையும் தேடாமல்
உறங்கியது போதும்……*

*உறக்கம் சோம்பலைக் கொடுக்கும்
சோம்பல் சுறுசுறுப்பைக் கெடுக்கும்
சுறுசுறுப்புச் சிந்தையை வளர்க்கும்
சிந்தை அறிவைப் பெருக்கும்!!!*

அறிவு விழிப்பைப் படைக்கும்
விழிப்பு உன்னை மனிதனாய் மாற்றும்
விழித்துக்கொள்... விழித்துக்கொள்...
உறங்கியது போதும்……

# அன்பு அனைத்திற்கும் ஆரம்பம்

**(அன்பு சுயநலமற்றது, சகலத்தையும் தாங்கவும் சகிக்கவும் கூடியது. இந்த அன்பு என்ற குணம் வளர்ந்தாலே பிற நற்குணங்கள் யாவும் தானாக வந்துசேரும் எனவே அன்பினைப் போற்றிக் கடைப்பிடிப்போம்)**

உயிர்களிடம் அன்புள்ளம் பெருக்கிடவே செய்வோம்!
உயிர்களினை உயிர்களாக மதித்திடவும் தெளிவோம்!
அயராது அனைவருக்கும் அரவணைப்பைத் தருவோம்!
அன்பாலே அனைவரையும் அனுசரித்துச் செல்வோம்.!
உயர்வாக எழுந்திடவே உண்மையாக இருப்போம்!
உண்மையாக இருந்திடவே அன்புள்ளம் வளர்ப்போம்!
வயிரமாகப் போற்றிடவே வாய்மையுடன் இருப்போம்!
வாழ்க்கையினை அன்பினாலே வளமையாக்கி வெல்வோம்!

கடுங்கோபம் எழுவதையோ கரைத்திடவே செய்வோம்!
கடுங்கண்போல் கடுமையாக இருப்பதையோ வெறுப்போம்!
தடுமாற்றம் இல்லாமல் தணிவோடு இருப்போம்!
தற்பெருமை கொள்ளாமல் மனத்தாழ்மை பெறுவோம்!
நடுநிலையாய் எதனையும் நடத்திடவும் செய்வோம்!
நன்மைதனை எவற்றிலும் நாட்டிடவும் வருவோம்!
பொறுமையினைக் கடைப்பிடிக்க தவறாது முயல்வோம்!
பொல்லாத வஞ்சனையைப் புறம்பாக ஒழிப்போம்!

வெறுமையினை வெறுத்திடவே வெகுண்டெழுந்து வருவோம்!
வெளிப்படையாய் பயன்பாட்டைப் பெற்றிடவும் செய்வோம்!

வறுமையினை அன்பினாலே வற்றிடவே செய்வோம்!
வன்மையினை விதைத்திடவே வைராக்கியம் கொள்வோம்!
அறுதியிட்டு முறைபடுத்தி வழிதனையே அமைப்போம்!
அமைதியாலே வாழ்க்கையினை வழிநடத்திச் செல்வோம்!
முகங்களிலே பலவகைதான் ஒருயிராய் இருப்போம்!
மனங்களை ஒன்றாகப் பொருத்திடவே செய்வோம்!

அகந்தைகளை முற்றிலுமாய் அறுத்திடவே வருவோம்!
அகங்களினை அன்பினாலே வென்றிடவும் செய்வோம்!
உகந்தாரே என்றார்போல் அனைவரையும் அழைப்போம்!
உண்மையான அன்பினாலே யாவரையும் ஏற்போம்!
சகோதரனாய் இருந்திடவே தவறாது நிற்போம்!
சகோதரத்துவம் தொடர்ந்திடவே தவறாது உழைப்போம்!
கர்வமென்ற கொடூரனையோ காலாலே மிதிப்போம்!
கபடமில்லா உள்ளத்தை வரவேற்க முயல்வோம்!

அர்ப்பணமாய் உலகிற்கு அன்பினையே படைப்போம்!
அன்புள்ளம் அனைவரிடம் பெருக்கெடுக்கச் செய்வோம்!
அகிலத்தை நம்முடைய அன்பினாலே அடைப்போம்!
சங்கடத்தை நம்முடைய பொறுமையாலே கடப்போம்!
விடிகின்ற பொழுதுகளோ நாளையாக இருக்கும்!
விரைவாகச் செல்வதற்கோ நாமாக வருவோம்!
முடிகின்ற செயலாக அனைத்தையும் பார்ப்போம்!
முன்பாக அதற்காக எண்ணிச் செயல்படுவோம்!

தடியுமாகக் கோலுமாக உறுதியோடு நிற்போம்!
தளராது அதற்காக மனஉறுதி கொள்வோம்!
கடிந்து தினம் உழைத்திடவே நாளுமே எழுவோம்!
களமான உலகத்தை அன்பாலே வெல்வோம்!!!!!!!!



# துறை நிகழ்வுகள்

| நாள் | நிகழ்வு |
|---|---|
| *05.09.2021* | வ.உ.சி. *150*ஆவது பிறந்த நாள் விழா சிறப்புச் சொற்பொழிவு |
| *11.09.2021* | பாரதியார் நினைவு நூற்றாண்டு விழா |

## சொல் விளையாட்டு விடைகள்

| | | |
|---|---|---|
| 1. சுஜாதா | 2. அலையோசை | 3. டம்பாசாரி விலாசம் |
| 4. சாகுந்தலம் | 5. கருணாமிர்தசாகரம் | 6. குறும்பா |
| 7. அகிலன் | 8. நாடகவியல் | 9. வீரமாமுனிவர் |
| | 10. கல்கி | |

**முன் அட்டை**

பி. சுவாதி, இளமறிவியல் கணிதவியல், மூன்றாமாண்டு

சீ. யாமினி, இளம் வணிகவியல், மூன்றாமாண்டு

மு. திரிஷா, இளம் வணிகவியல், இரண்டாமாண்டு

**பின் அட்டை**

க. ரேவதி, இளம் வணிகவியல், மூன்றாமாண்டு





Ramya
Saji
soka
ஸ்டெல்லா




Shanthi Nandha
45 others
You




Chandrika Kumar
ANCHANA R
79 others
Ganesan Dakshinamurthy
12:08 PM

# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்



தமிழ்த்துறை - சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

நற்றமிழ்க்குடில்

தமிழ்த்துறை - சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு